தென்றல்

ஆசிரியர்: கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம்: 'தென்றல்', சென்னை-6.

மலர் 7 | சென்னை. திருவள்ளுவர் ஆண்டு 1991, ஆனி 12 (25-6-'60). சனிக்கிழமை | இதழ் 2

இரத்த வெள்ளம் !

"முதலில் சீக்கியர் ஆட்சியை இழந்தோம். தற்போது சீக்கியர்களின் தன்மானத்தை இழந்துள்ளோம். அன்று ஆங்கிலேயர் ஆட்சி; இன்று இந்து வகுப்புவாதிகளின் ஆதிக்கத்திலுள்ள தேசிய ஆட்சி. ஆங்கிலேயர் நம்மை பயன்படுத்திக்கொள்ள மட்டுமே விழைந்தனர். ஆனல பஞ்சாபி இந்துக்கள் நம்மை அழித்து விடவும் எண்ணுகின்றனர்.

சுதந்திரத்தை வரவேற்று மகிழ வேண்டுமெனின், நாம் பஞ்சாபி சுபாவை அமைத்தேயாகவேண்டும். நாம் சுபாவைப் பெறத்தான் போகின்ளேம். அப்பொழுதுதான் நாம் நமது மதிப்பையும தன்மானத்தையும பாதுகாத்துக்கொள்ளமுடியும்.

இது ஓர் அறப்போர்; 'தற்கொலைப் படை'யும்கூட. இவ்வீர மறவர்படை பஞ்சாபி சுபாவைப் பெருது திரும்பாது."

—இந்தக கருத்துக்களைக் கொண்ட அகாலி தளத்தார் சுவரொட்டிகளைப் பஞ்சாப் மாநிலம் பூராவும் காணலாம். ஆங்கிலேயா வெளியேறிய நாளிலிருந்தே மொழிவழியில் சீக்கிய மாநிலய அமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை விடாது வலியுறுத்திவரும் சீக்கியப் பெரியார் தாராசிங் தில்லி ஆதிக்கத்திலிருந்து முழுதும் விடுபட்ட சுதந்திர சீக்கியத் தாளைக்கூடக் கேட்கவில்லை. மற்ற மாநிலங்கள் மொழி அடிப்படையில் திருத்தியமைக்கப்பட்டது போன்றே,

— 12-ம் பக்கம் —

ஆசிரியர் எழுதிய தத்துவக் கட்டுரைகளைப் பற்றிப் பலகடிதங்கள் வந்தன. தத்துவங்களை அத்தனை எளிய நடையிலும், தூய தமிழிலும் எழுத முடியும் என்ற நம்பிக்கை, படித்து வந்த தோழர்கள் நெஞ்சங்களிலே எழுந்தது. அந்த நம்பிக்கை பலரைத் தூண்டவும் செய்தது. சிலர் எழுதியும் முடித்தனர்; அனுப்பினர். சில வெளியிடப்பட்டன. தத்துவம் இருண்ட காடில்லை; ஒளிமிக்க பூங்கா! எளிதாய் எவரும் செல்லலாம்; ஏற்றதைக் கொள்ளலாம்; மீளலாம்!-மொத்தத்தில், இந்த உண்மை வெளியானது.

தத்துவக் கட்டுரைகளுக்குத் தமிழகத்தில் இருக்கின்ற வரவேற்பைக் கண்ட தோழர் செல்வன், "தத்துவம் என்ருல் என்ன?" என்ற மொழிபெயர்ப்புக் கட்டுரையை அனுப்பியுள்ளார்.

> "வாழ்க்கைச் சுழற்சியிலிருந்துதான் தத்துவம் பிறக்கிறது. அது வாழ்வின் பாதையை மென்மைப்படுத்துகிறது; வாழ்வுக்கு ஒளி கூட்டுகிறது. அதனை, வாழ்வினின்று தனித்துவிடுவதற்கில்லை!"

என்ற கருத்தை அடக்கிய இந்தக் கட்டுரை "Bhavans Journal" என்ற ஆங்கில ஏட்டில் வெளி வந்தது. படிக்கையில், கருத்து மாறுபாடு தோன்றினுல் 2-7-'60-க்குள் எழுதி அனுப்புங்கள் சுருக்க மாகவும் தெளிவாகவும்.

—(ஆ-ர்.)

தத்துவம் என்ருல் என்ன?

தத்துவம், நாம் தினசரி வழக்கமாகப் பயன்படுத்துகிற வார்த்தைதான். ஆனுல் சந்தர்ப்பங்களுக்குத் தக்கவாறு அதன் பொருளின் வடிவம் வேண்டுமானுல் மாறலாம்.

தத்துவம், எல்லோரும் ஒப்புக்கொள்ளும் ஒரு பொருளிலேதான் அடங்கிக் கிடக்கிறது என்பதை நாமும் நம்புகிருேம். அவ்வாறு எண்ணுவது தவறு என்கிறேன். நாம் நம்பிக்கை கொண்டிருப்பதிலேதான் தத்துவம் அடங்கிக் கிடக்கிறது என்று கொள்வோமேயானுல் அதனையே தலைசிறந்தது என்றும் கருதுவோமேயானுல், அதனையே பிறரிடம் வற்புறுத்திச் சொல்வோமேயானுல் அது மிகத் தவறே.

பொதுவாக, தத்துவம் என்ருல், இந்த விரிந்து பரந்த நிலப்பரப்பின்மீது நாம் வாழ்வதற்கான முறையில் உருவாக்கப்பட்ட திட்டங்களின் விளக்கம் என்றும், பொருட்களின் ஐக்கியத்திற்கும் உறவுக்கும் உத்திரவாதம் தரும் ஒரு அறிக்கை என்றும் கொள்ளலாம்.

மனித எண்ணங்களின் துவக்கத்திலிருந்தே தத்துவங்களும், தத்துவ வாதங்களும் இருந்து வந்திருக்கின்றன; வருகின்றன. கடவுள் தன்மை பாடுந் தத்துவங்களே அதிகமிருந்துள்ளன. கடவுள் தன்மை பாடாத் தத்துவங்களும் இல்லை என்று சொல்வதற்கில்லை. தத்துவங்களுக்கு முடிவில்லை; தத்துவ ஓடைகள் வற்றி வறண்டு போவதில்லை; தத்துவ ஞானிகள் மாண்டு போவதில்லை.

வாழ்க்கை ஓடை ஓடிக்கொண்டேயிருக்கிறது. தினந் தினம் எந்தச் சாதாரண மனிதனும், பற்பல புதிய பிரச்னைகளை முன்னிறுத்திக்கொண்டே நிற்கிருன். அவைகளை விடுவிக்க முயலவும் செய்கிருன். தனியாகவோ, கூட்டமாகவோ முயல்கிருன். அந்தப் பிரச்னைகளுக்கு விளக்கந் தேடுகிருன்: தேடிக் கொண்டேயிருக்கிருன். அவன் அவ்வாறு தேடியலையும்போதெல்லாம் அவனுக்குப் புதுப் புதுத் தத்துவங்கள் பிறக்கின்றன. ஒவ்வொன்றும் அவனுக்குப் பயன்படுவதாகவே உள. ஆனுல் அந்தத் தத்துவங்களிலே எவன் எவன், யார் யார் நம்பிக்கை கொண்டு இலங்குகிருர்களோ, அந்தத் தத்துவங்களால் எவன் எவன், யார் யார் திருப்தி அடைகிருர்களோ, அவர்களே அவைகளின் பலனை அடைய, அனுபவிக்க முடியும். ஆனுல், அடுத்த மறு நாள், அதே மனிதன் முன் பல புதுச் சந்தேகங்கள் மலர்கின்றன; புதுப் பிரச்னைகள் உருவாகின்றன; புதிய அனுபவங்கள் கிடைக்கின்றன. எனவே, மனிதன் முந்தைய நாள்-முதல்நாள் தத்துவத்தை மாற்றியமைக்க முயல்கிருன். சில வேளைகளில் அவன் புதிய உலகத்திற்குள் தன்னைப் புதைத்துக்கொள்கிருன்.

தத்துவத்திற்குத் துவக்கம் உண்டே தவிர, முடிவு இல்லை! அது எங்கும் முடிவதில்லை. உண்மையின் உயிர்ப்பில் சாகாத தத்துவங்கள் அவை. காலங் காலமாக, வாழையடி வாழையாக சில தத்துவங்களே உண்மையானவையாக விளங்க முடியும். அத்தகைய மனிதத் தத்துவங்களே, அவனுடைய மனத்தின் அடித்தளத்திலிருந்து உருப்பெற்று, அவனை அனுதினமும் உறுத்திக்கொண்டே இருக்கின்றன. அவனுடைய சுகத்தோடும் துக்கத்தோடும் பங்கெடுத்துக் கொள்கின்றன. அவனிடையே புரட்சி தோன்றுகிறது; அவனேடு புதுமை பாடுகிறது. அன்றி, ஏதேனும் ஓர் உலகியல் தோற்றமாயினும் சரி, அந்தத் தத்துவங்கள் அடைபட்டுக் கிடக்கும் இடமாயினும் சரி, அதற்கு முடிவிடம் தத்துவந்தான்! அதுதான் எல்லோராலும் நம்பப்பட வேண்டும்; பின்பற்றப்பட வேண்டும் என்ற நிலை, மனிதனுடைய அறிவும் மனமும், மேலே மேலே உயர உயர வளரவேண்டும் என்பதற்குப் பதிலாக அது நிலைக்குமானுல், அஃதே, வரலாற்றுச் சிந்தனை அறுபட்டுத் தடைபட்டுப் போவதற்கேற்ற 'தலைமை' என ஆகிவிடும்.

தத்துவங்கள், எத்தனையோ பாரம் பரியமானவையாகவும், எத்தனையோ மறந்து போன, பழைய காலத்துத் தத்துவ ரீதிகளாகவும் இருக்க வேண்டும். வாழ்க்கை ஆக்க ரீதியானது. அது எத்தனையோ சொந்த இரகசியங்களைக் கொண்டிலங்குகிறது. தத்துவம் வெறும் புதிராகவோ, முற்றுப் பெற்றதாகவோ இராது. வாழ்வும் தத்துவமும் ஒன்றையொன்று தழுவி, பின்னிப் பிணைந்து அதனதன் பாதையிலே நடைபோட வேண்டும். ஏனெனில், வாழ்க்கை செயல்படுவது. தத்துவம், அதன் விளக்கமாக நிற்பது. சில வேளைகளில் வாழ்வின் இடையே நின்று, தடையாக விளங்குவது. மற்ரெரு சமயம் வாழ்வின் விமர்சனத்தைத் தத்துவம் பிரதிபலிக்கும்.

எத்தனையோ வழிகளிலிருந்து பிரிந்து, தத்துவம், காலத்திற்கு காலம் பாறுபட்டுக்கொண்டிருக்கிறது. ஒவ்வொரு மனிதனும், தன்னுடைய வாழ்வில், உயர்தரமான உன்னதமான இலட்சியங்களை கொண்டிருப்பவனும், தன்னுடைய வாழ்க்கைக்குள்ளே தத்துவத்தை அடக்கி வைத்திருக்கிருன். ஆனுல், அதனை, அவன் அடுத்தவர்களிடம் வெளிப் படையாகச் சொல்லிக் கொள்வதில்லை. தன்னுடைய தத்துவங்களுக்குப் பிறரிடம் விளக்கம் சொல்வதில்லை. அதனைக்கொண்டு மற்றவர்களை அறை கூவுவதில்லை. ஆனுல் அந்தத் தத்துவங்களாலே அவன் நிம்மதி அடைகிருன்; மனவமைதி கொள்கிருன். அதிலேதான் மனதிற்குச் சாந்தி தரும் இடம் இருப்பதாக நினைக்கிருன்.

"ஏன்?" என்று ஒவ்வொரு மனிதனும் கேட்கிருனே, அதற்கான காரணம் அங்கேதான் இருக்கிறது. "அது என்ன?" என்று கேட்பதைப்போலத்தான், "அவன் யார்?" என்பதும், சில வேளைகளில் மனிதன் அடங்கிப் போகிருன்; பயந்துகொண்டுவிடுகிருன். இந்தமாதிரி கேள்விகளுக்கெல்லாம் விடை தெரியாமல் திக்குமுக்காடுகிருன். ஆனுல் கேள்விக் குறிகளோ, அவனது அறிவுக் கோயிலின் கதவுகளை விடைக்காகத் தட்டிக்கொண்டு கிடக்கின்றன. அப்போது கிடைக்கின்ற விடைதானே, தத்துவம்!

நடை பாதையிலே வாழ்வோரின், வாழ்க்கைத் தத்துவம்கூட, சில வேளைகளில், சுகந் தருவதாக, ஆழ்ந்த பொருள் பொதிந்தாக உள்ளது. அதுவும் அவர்களுக்கு மனத் திருப்தியைத் தருகிறது.

தத்துவங்கூட ஒரு நோக்கத்தைப் பூர்த்தி செய்வதுதானே! அது, எப்போதும் வெறும் பொருளாக, இல்லாத பொருள்போல (abstract) இருப்பதில்லை. அது வாழ்விற்குத் துணை நிற்கிறது. அது விளக்கந் தருவதோடு, மனத்திற்கு அமைதியும் தருகிறது. அதை ஏன் நாம் செயல்படுந் தத்துவம் என்று அழைக்கக் கூடாது? எனவே, தத்துவம் இரண்டு வகைப்படுகிறது. இல்லாத பொருள் தத்துவம், அனுபவத்திற்கு வருந் தத்துவம் என்று கொள்ளலாம். எனினும் அவை ஒன்றுக்கொன்று இணைப்பே! சமமே! இரண்டுமே பிரிக்கமுடியாதவை! பொருள் தத்துவம், நமது அறிவை, ஞானத்தைத் திருப்திபடுத்தவும், அதற்கான அடிப்படைக் காரண காரியத்தை துருவி ஆராயவும் முயலும் அதே வேளையில், செயல் தத்துவம் மனித மனத்திற்குச் அமைதியைத் தருவதாய் அமைகிறது. வாழ்க்கை வெகு வேகமாக முன்னேறும் பொழுது, அது ஒன்றிற்கொன்று முரணடைகிறபொழுது, தத்துவம் துணை நிற்கத் தலைகாட்டுகிறது. மனிதன் தத்துவத்திற்கு விடுதலை தந்துவிட முடியாது. அப்படியானுல், அவன் தனது ஆசாபாசங்களை, வாழ்வின் விருப்பு வெறுப்புகளை, வெளியேற்றி விடுதலை செய்ய வேண்டுமே! அப்படி முடியாதே! எனவேதான், உண்மையான தத்துவம், வாழ்வுச் சுழற்சியிலிருந்து உருவாகி, வாழ்வின் பாதையை மென்மைப்படுத்தி, ஒளி கூட்டி, தேவையான வலிவை, சக்தியைக் கொண்டு இயங்குகிறது. ★

"போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன்; எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன்!"

எண்ணம்

மலர் 7 25-6-60 இதழ் 2

வாரீர்! வாரீர்! தமிழினைக் காப்போம்!

புறப்படும் படையெனப் போர்க்குரல் கேட்டது!
பொங்கிய தோழர் உள்ளஞ் சிலிர்த்தது!
கரிப்படை பரிப்படை காலாட் படையென
செருத்திறங் காட்டிய திராவிடர் வழியில்
சரித்திரங் காணத் தாவி எழுந்தார்!
தம்மை மறந்து புன்னகை பொழிந்தார்!

x x x

அன்னையர் கூட்டம் ஆர்ப்பரித் தெழட்டும்!
ஐந்து வயதுப் பிள்ளையும் வரட்டும்!
பொன்னிகர் மாதர் போர்க்குணம் பெறட்டும்!
புலவர் தமிழிற் புகழ் பாடட்டும்!
மாணவர் போரில் மாண்புகழ் கொள்ளட்டும்!
மடிவோர் யாவரும் இதில்மடி யட்டும்!
பட்டது மேனி படைத்தது புகழ்என(ச்)
சுட்டெரிப் போரும் சுற்றமும் அழட்டும்!
செத்தவன் படத்தைச் சிங்கா ரித்துத்
திருநா டுறைவோர் இருகை தொழட்டும்!
கத்துங் கடலும் கடற்கரை மணலும்
முத்துத் தமிழும் மூவர் வழியும்
பின்னாள் திராவிட மின்னார் வயிற்றில்
பிறக்கும் மக்களும் பேர்உரைக் கட்டும்!
பூத்த மலர்கள் போலபோல வென்று
காற்றில் உதிரும் கணக்கில் விழுவோம்!
இன்னவன் பிள்ளை இன்னவன் என்று
எதிர்வரும் காலம் ஏத்திப் புகழும்
புகழை நமது புதல்வர்கள் பெறட்டும்!
பூக்கும் திராவிடம் சிலைவடிக் கட்டும்!

x x x

கட்டி வந்தது கடுகள வில்லை!
கட்டை விழுந்தால் காற்றும் கடிக்கும்!
நோயில் விழுந்து பாயிற் படுத்து
நொடிக்கொரு துன்பம் அடிக்கடி சாவென
நாளைக் கடத்தி நாமும் சாவதா?

x x x

இந்திப் போரிது எம்மரும் அன்னை
சிந்தும் கண்ணீர் தீர்த்திடும் போராம்!
சந்து சந்தாகச் சதைகூறாகத்
தாக்கிய போதும் தளரா உள்ளம்
கொண்டவர் வாரீர்! இந்திப் பேயைக்
கொளுத்தும் போரில் குதித்திட வாரீர்!
தமிழன் பெற்ற தமிழர் களெல்லாம்
தலைகொடுத் தேனும் தமிழினைக் காப்போம்!

கண்ணதாசன்

முழக்கங்கள்!

★

முழக்கம்: 1

நாடுவிட்டு நாடுவந்த இந்திக்கழுகே!--இன்று
கேடுகெட்டுச் சூடுபட்டு ஓடுவெளியே!

முழக்கம்: 2

செருப்புக்குச் செங்கோலும் முடியும் இல்லை!
தென்னாட்டில் இந்திக்கு இடமுமில்லை!

முழக்கம்: 3

இராவணன் தங்கையின் மூக்கை அறுத்தான் இராமன்
என்பது பழங்கதை!
இந்திச் சிறுக்கியின் மூக்கை அறுப்பான் திராவிடன்
என்பது புதுக்கதை!

[இத்தகைய முழக்கங்கள் பிரச்சாரத்திற்குப் பயன்படுமாதலால், எழுதியனுப்புங்கள்; வெளியிடப்பெறும். இயலும் படிப்பகத்தார்கள் இவற்றைச் சுவரொட்டிகளாகத் தயார் செய்து பொதுவிடங்களில் ஒட்டலாம்.]

--கண்ணதாசன்.

"தென்றல்"

நெடுங்கதைப் பரிசுப் போட்டி

முடிவு நாள்
ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.

★

முழு விவரம்
அடுத்த இதழில்!

நிலக்கோட்டையில் காமராசர் மனக்கோட்டை!

திராவிட முன்னேற்றக் கழகம் தமிழ்நாட்டுக் காங்கிரசார் உள்ளத்திலே வேதனையை வார்த்து அவர் தம் எண்ணத்திலே இழிசெயல்கள் பல உருவாகிடச் செய்துள்ளது. கழகத்தின் பணியினை வேறு வகையில் பின்தங்கிடச் செய்வதற்கு அவர்களிடத்திலே வழிவகைகள் இல்லை. அவர்களுடைய இதயத்து எரிச்சலையெல்லாம் வெளியே காட்டுவதற்குத் துடிக்கிறார்கள். கழகக்கூட்டங்களைக் கலைப்பதும், கழகத்தவர் இல்லங்களில் கல்லெறிவதும், கழகப் பணிமனைகளில் புகுந்து தலைவர்களின் படங்களை உடைப்பதும் காங்கிரசுக் கட்சியின் வேலைத்திட்டங்களாகி விட்டன. அண்மையில் நடைபெற்று முடிந்துவிட்ட பல்வேறு செயல்கள் இத்தகைய செய்திகளைத்தான் தெரிவித்துள்ளன. மிக மிக் குறுகிய நாட்களிலேயே காங்கிரசுக் கட்சியின் புகழ் மங்கிப்போகுமென்று கதராடைக் கனவான்கள் எவரும் எண்ணிப் பார்த்திருக்கமாட்டார்கள். முன்னேற்றக் கழகத்தின் அரசியல் உணர்வையும் விடுதலை வேட்கையையும் எப்போதும் எண்ணிப் பார்க்காவிட்டாலும், எப்போதாவது கணக்கிட்டுப் பார்க்கும் கண்ணியம் பெற்றுள்ள மிகச்சில செங்கல்வராயர்களும் அந்தக் குழுவிலேதான் இருக்கிறார்கள்! அவரைப் போன்றவர்களுக்குக் கழகத்தின் வளர்ச்சியினை வெறும் புரட்டு மொழிகளினாலே, புளுத்து அழுகிப்போன வார்த்தைகளினாலே ஒழித்துக்கட்டுவது இயலாத காரியம் என்பது நன்றாகப் புரிந்துள்ளது. தங்களுக்கு வாய்ப்புக் கிட்டும் வேளைகளில் வாய்திறந்து பேசுகிறார்கள். ஆனால் கேட்கத் தெரியாத காங்கிரசுத் தலைவர்கள் தான் இப்போது அதிகமாக நடமாடிக்கொண்டுள்ளார்கள். பெரியதொரு விடுதலை இயக்கத்திலே பணியாற்றி "அடிமைஇந்தியாவை அகில உலகத்திலும் மெச்சத்தகுந்த நாடாக்கிவிட்டோம்" என்று பேசத் தெரிந்த அளவுக்கு, எல்லா மக்களுடைய சுதந்திர உணர்ச்சியையும் தாயகப் பற்றினையும் மதித்து ஏற்றுக் கொள்ளும் மாண்பு எந்தக் காங்கிரசாரிடத்திலும் காணமுடியாத பண்பாகிவிட்டது கழகத்தின் குற்றச்சாட்டுகளுக்குப் பதில் கூறத் தெரியாதவர்கள் அத்தனை பேர்களும் அவர்கள் எந்தக் கட்சியிலேயிருந்தாலும் ஏகஇந்தியாவின் புகழை நிலைநாட்ட வேண்டும் என்பதைத்தான் நினைவூட்டிக் கொண்டுள்ளார்களே தவிர, நாட்டு நிலைமைகளுக்கேற்பத் தம் நினைவுகளை உருவாக்கி வெற்றி கொள்ளும் மற்ற பகுதி மக்களை மறந்துவிட்டார்கள்! அரசியல் விவேகம் நிறைந்தவர்கள் என்றால் நாம் கூறும் விளக்கத்தினை முன்பே அறிந்துகொண்டிருப்பார்கள். ஆனால் அறிந்து கொண்டிருப்பவர் என்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ள காமராசரிடத்திலேயே, இந்தத் தெளிவினைக் காணமுடியவில்லை! நம்முடைய துன்பம், அவர் இந்தநாட்டின் முதலமைச்சராக ஆக்கப்பட்டிருக்கிறார் மதுரை மாவட்டச் சுற்றுப் பயணத்திலேஅவர் சொல்லியிருக்கும் பொன்மொழிகள் அவரது விவேகத்தை விளம்பரப்படுத்தியுள்ளன.

திராவிட முன்னேற்றக் கழகத்தினைப்பற்றி காங்கிரசுக்காரர்கள் குறைவாக மதிப்பிட்ட காலம் ஒன்றிருந்தது. ஆனால் இடைக் காலத்தில் காமராசர்கள் எண்ணிப் பார்த்துக் கணக்கிட முடியாத வகையில் வளர்ந்துவிட்டோம்! 1947-48-ம் ஆண்டுகளில் திராவிடர் கழகம் என்றால் கிலியூட்டும் அமைப்பென்று காமராசர் கருதினார்! ஊர் ஊராக அவருடைய பேச்சுக்களைக் கேட்டவர்கள் மயக்கம் போட்டுத்தான் விழுந்தார்கள்! முன்னேற்றக் கழகம் துவக்கப்படுவதற்கு முன்னாலேயே அண்ணா அவர்களை அவர் அறிவார். இவர்கூடத் தமிழ்நாட்டின் முதலமைச்சராக வருவார் என்ற அறிகுறிகள் காங்கிரசார் உள்ளத்திலே கூட அரும்பாத நேரத்தில் "அண்ணாத்துரைக்கு மந்திரி வேலை கொடுத்தால் மூன்று நாள்கூட ஆளத் தெரியாது" என்று திருச்சிப் பொதுக்கூட்டம் ஒன்றிலே சொல்லி வைத்தார்! திராவிடர் கழகத் தலைவராக இருக்கும் பெரியார் அவர்களின் பார்ப்பனதாசர் என்ற பட்டங்களையெல்லாம் வாங்கி வைத்துக்கொண்டுதான்-

"நாயக்கருடைய முகமூடியினை நான் கிழித்துவிட்டேன்; இனி நாடுஅவரை ஏற்றுக்கொள்ளாது" என்று புலம்பித் திரிந்தார்! கழிந்து போன ஆண்டுகளில் அதே காமராசர் பெரியாரின் காலடியிலே விழுந்தார் - அவரும் இவரும் ஒன்றானார்கள்-அண்ணாவுக்கு மந்திரி வேலையைச் சிபார்சு செய்தவர், முதன் மந்திரியானதும் இப்போதுதான்! அறிஞர் அண்ணா தன் பொன்மொழிகளில் "பல ஆண்டுகள் காங்கிரசிலே இருந்தும் மந்திரியாக முடியாத காமராசர் எனக்கு மந்திரி வேலை வாங்கித் தருகிறேன் என்று பேசுவது சரியல்ல. அப்படி கிடைத்தாலும் மூன்று நாட்கள்கூடத்தேவையில்லை. மூன்று மணி நேரங்கள் போதும், இந்த நாட்டை வாழ்விக்கும் திட்டங்கள் தருவதற்கு. காமராசர் இதனை முதலில் செய்யட்டும்" என்று தெரிவித்தார்! காமராசருடைய சர்க்கார் எதையும் சாதிக்கமுடியாத ஏமாளி சர்க்கார் என்பதை நாட்டு நடப்புகள் சொல்லிக்கொண்டுள்ளன. காமராசர், மந்திரிசபை அமைக்கத் துணிந்த நாட்களிலே அண்ணாவின் வாழ்த்து மொழிகளுக்காக ஏங்கித் தவித்தார் என்பதனை மிகச் சிலரே அறிவார். யார் யாரையோ தூதனுப்பி அலுத்துப் போனவர்தான் என்பதை, இன்னும் அவர் மறக்காமலிருக்கிறார். அதனால் தான் அண்ணாவின் அரசியல் வெற்றிகள் அவருக்கு அதிர்ச்சியைத் தருகின்றன. அன்றிலிருந்து இன்றுவரை காமராசராலே வெற்றி காணமுடியாத ஒரே ஒரு தலைவராக அண்ணா அவர்கள் இருக்கிறார்கள்! இந்த அரிய உண்மையின் எதிரொலிகளைத்தான்-எரிச்சல் மொழிகளாக ஏசல் உரைகளாகக் காமராசரின் மதுரைச் சுற்றுப் பயணம் ஒலிபெருக்கியுள்ளது!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது முதலமைச்சராகிவிட்ட கனம் காமராசருக்கு கடுமையான கோபம் இருப்பதிலே வியப்பில்லை. இவர் ஆட்சிக்கு வந்தவுடனே கல்வித் திட்டத்தை நீக்கிய காரணத்தினாலே தமிழரின் பாராட்டுக்குரியவரானார். பிறகு இவருடைய கழுத்தறுப்புச் செயல்களினால் கண்டன உரைகளைப்பரிசுகளாகப் பெற்றுக்கொள்ள வேண்டியவரானார்! காமராசர் நல்லவரா கெட்டவரா என்று கணக்கிடாமல், அவருடையஆட்சி நாட்டுக்கும் நாட்டுமக்களுக்கும் நன்மை நல்குமா நல்காதா என்ற வகையில் தான் மதிப்பீடு அமைந்தது. தமிழ்நாட்டின் பகுதிகள் - தேவிகுளம் பீர்மேடு ஆகிய இரண்டு வட்டங்களும்-தமிழகத்துடன் இணைக்கப்பட வேண்டுமென்பது தமிழர்களின் தணியாத தலையான ஆவல் காமராசர் கேட்டார் "மேடாவது? குளமாவது? எங்கிருந்தால் என்ன?" என்று! இவர் தலைமை வகிக்கும் சர்க்காரின் கங்காணித் தன்மை மிகவும் சிறப்பாக வெளிப்பட்டது! 1956-பிப்ரவரி 20-ம் நாள் தமிழ்நாடெங்கும் பொது வேலைநிறுத்தம் நடைபெற்றது! காமராசர் "கடை அடைப்பு வேண்டாம் - கடைக்காரர்களுக்குப் பாதுகாப்புத் தருகிறோம்"-என்றெல்லாம் தண்டோரா போட்டுச் சொன்னார். கூட்டணியிலே இடம்பெற்ற எதிர்க் கட்சித் தலைவர்களின் வேண்டுகோளைக் காமராசர் என்ற தனி மனிதர் தனக்குள்ள அதிகாரத்தால் மாற்றி அமைத்துவிடமுடியும் என்று எண்ணினார்; ஏமாந்தார். எதையெதையோ சொல்லிக் குரல்கொடுத்தார்; எவரும் கேட்கத் தயாராக இல்லை! கூட்டணியிலேயிருந்த தலைவர்களுக்குத் தனித்தனியாகத் தூதுவர்களை அனுப்பினார். வெட்கத்தை மறைத்துவேதனையை வெளிக்காட்டினார்! அடக்குமுறைப் படையிருந்தாலும் அஞ்சினார்! எல்லாத் தலைவர்களையும் கேட்டுப் பார்த்துவிட்டார். இறுதியில் அவர்கள் எல்லோரும் ஒரே முடிவினை சொன்னார்கள். கூட்டணித்தலைவர் உள்பட எல்லாஉள்ளங்களும், அறிஞர் அண்ணா அவர்களையே-அவர் முடிவினையே எண்ணியிருந்தன. காமராசர் அண்ணாவின் உருவத்தைக் கணக்கிட்ட அளவுக்கு, அவரது அரசியல் மேதைத் தன்மையைஅப்போதெல்லாம் புரிந்துகொள்ளும் பக்குவம் பெறவில்லை. அந்த அவசரத்திலேதான் காமராசர் ஊர் ஊருக்குத் தண்டோராப் போட்டுக் கடை திறக்கும்படி கேட்டார்! கடைசியில் படுகாயப்பட்டார்கள். சர்க்கார் சங்கடப்பட்டது. பல்லுடைந்து விழுந்தார்கள்! தண்டோரா சர்க்காரின் நேர்மையற்ற முயற்சிகளையும் காமராசருடைய சாகசங்களின் தோல்விகளையும், அண்ணா அவர்கள் தமிழகத்திற்கும் துணைக் கண்டத்திற்கும் சொன்னார். அவைகளைக் காமராசர் இன்னும் மறந்துவிடவில்லை!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் மக்கள் சக்தியை வெறும் மந்திரிப் பதவிமட்டும் மாய்த்துவிட முடியாதென்பதை பொது வேலை நிறுத்த நாட்களிலே காமராசர் கண்டார்-கலங்கிப் போனார்! அடுத்த நிகழ்ச்சியாகப் பொதுத் தேர்தல் 1957-ல் நடைபெற்றது. தனிக் காட்டுராசாக்களாக இருந்த விருதுநகர்வீரர்களின் ஆணவத்தை அடக்கிக் காட்டும் பணியினை, முன்னேற்றக் கழகம் ஏற்றது. தமிழ் நாடெங்கும் காமராசர்கள் எதிர்பாராத எண்ணிக்கையில் போட்டியினை நிலை நாட்டியது! குறைந்த வெற்றி என்றாலும், காமராசர்களுக்குக் குதூகலம் இல்லை, அங்கே! அதற்கும் பின்னாலே சென்னை மாநகராட்சி மன்றத்தினை இழந்துவிட்டுக் காங்கிரசுக் கட்சி ஓடினது. இதைச் செய்தது கழகம் என்பது காமராசருடைய சரியான கணக்காகிவிட்டது. நகர

கூடலரசன்

சபைத் தேர்தலில் தோற்றுவிட்டாலும் நகர் மன்றத்துத் தலைவர் தேர்தலிலாவது தோற்காமலிருக்க எத்தனையோ வித்தைகள் செய்து பார்த்தார்-இரண்டு தடவையும் கழகத்தின் முயற்சிகளுக்கு முன்னாலே முழங்கால் முறிந்து போனவர்களாக விழுந்தார்கள், கூவத்து நீர்அருந்தித் தாகம் தணித்துக்கொண்டவர்கள்! இப்படித் தமிழ்நாட்டின் எல்லா நிகழ்ச்சிகளிலும் காமராசருடைய ஆட்சி அலங்கோலப்பட்டிருப்பதை முன்னேற்றக் கழகம் காட்டுவதும்-அதற்குள்ள காரணங்களைத் தொகுத்துக் காமராசருடைய வேகத்தைத் தணிப்பதும், அவருடைய கோபத்திற்குக் காரணங்களாகிவிட்டன! காங்கிரசின் சாதனைகளைப் பற்றிப் பேசாமல், சர்க்காருடைய

— 8-ம் பக்கம் —

★ திருமணம் ★

முத்துக்களையும் மணிகளையும் இழைத்து வேயப்பட்ட மணப்பந்தல் எழில் பூத்த பொழிலாகக் காட்சியளித்தது.

உற்றாரும் உறவினரும் நண்பர்களும் மணவிழாவிற்கான பணிகளில் ஆரவாரத்துடன்முனைந்து நின்றனர்.

ஆனால் மணப்பெண்ணான மல்லிகா உள்ளம் குன்றிப் போயிருந்தாள். உள்ளத்தில் மகிழ்ச்சி இருந்தாலல்லவா முகத்தில் மலர்ச்சி ஏற்படுவதற்கு? அவள் தன் கூந்தலிலே சூட்டப்பட்டுள்ள மல்லிகையும் முல்லையும் தங்கள் நறுமணத்தின் மூலம் அவளுக்குத் திருமண மகிழ்ச்சியை ஏற்படுத்த முடியாமல் தவிப்பனபோல் காட்சியளித்தன. அவள் கண்களிலிருந்து கன்னங்களில் வழியும் கண்ணீரானது, தணலில் பட்ட மாங்கனியிலிருந்து வழிந்திடும் சாறுபோல் காட்சியளித்தது.

"மாப்பிள்ளை இப்பொழுது வந்துவிடுவானே. கழுத்தைச் சுற்றித் தாலிக்கயிற்றால் இறுக்கிவிடுவானே. அதோடு என் வாழ்வு பாழ்தானே. மனம் நிரம்பிய மணவாளன் இருக்க, யாரோ அறியாதவனை எப்படி ஏற்றுக்கொள்வது? ஒரு பெண்ணென்றால் ஒரு உடலும் ஒரு உள்ளமுந்தானே உண்டு. பலவந்தப்படுத்தி என் வாழ்வைத்தான் பாழாக்கப் போகிறார்கள்" என்று உள்ளம் நைந்து கண்ணீருகுத்தாள்.

★

"மணவாளன்! இப்பொழுதுகூடக் காலம் கடந்துவிடவில்லை. உடனே வேண்டிய ஏற்பாடு செய்யுங்கள்."

"மல்லிகா! இந்த நெருக்கடியான நேரத்தில் எனக்கு ஒன்றுமே புலப்படவில்லையென்று கூற மிக வெட்கப்படுகிறேன்; வேதனைப்படுகிறேன்."

"ஒன்றுக்கும் அஞ்சவேண்டாம். எப்படியும் வீட்டைவிட்டு வெளியேறி வாழ்வின் வழியை அமைத்துக் கொள்வோம்."

"அன்பே! நீ கூறுவது சரிதான். தலைமறைவு வாழ்வு நிலைகெட்ட வாழ்வாக நம்மை நெருக்கிவிட்டால்..."

"அத்தான்! நெய்யுடன்தான் நெய் கலக்கும். நீருடன் கலக்காது. அன்புடன்தான் அன்பு ஒன்றுசேர்ந்து ஒளிவீசும். தங்களை மறந்து நான் வேறொருவருக்கு மாலைசூட்ட விருப்பமில்லை. இன்று மணக்கோலத்துடன் விளங்கும் இந்த வீட்டில் தாங்களும் நானும் இணையாவிட்டால் நாளை இந்த வீடு பிணக்கோலமாகத்தான் காட்சியளிக்கும்" எனக் கண்ணீர் புரள, கேவிக் கேவி அழுதாள்.

மணவாளனும் மல்லிகாவை சாவின் முனையிலிருந்து வாழ்வின் முனைக்குத் திருப்ப, "மல்லிகா! அந்த அளவிற்கு இப்பொழுது ஒன்றும் வந்துவிடவில்லை. இந்தத் திருமணம் நடந்தேறிவிட்டாலும்கூட எப்படியும் நம் நிலைமையைச் சமாளிக்கும் திறத்தைப் பெற்றுக்கொண்டு, அதன்பின் எங்காவது சென்று இன்பவாழ்வைத் துவக்க ஆவன செய்கிறேன். அஞ்சாதே. சாவை நாடிச் சென்றுவிடாதே" என்று உணர்ச்சிகரமாகப் பேசினான். மல்லிகாவின் இதயத்தில் புதிய ஊக்கம் புறப்பட்டாற்போல பெருமகிழ்ச்சியுற்று மணவாளனைத் தழுவிக்கொண்டாள்.

"மல்லிகா! இந்த நிலையை யாரும் கண்டுகொண்டால்......?" என்று அவளது பிடியைத் தளர்த்திக்கொண்டான். மல்லிகாவின் தற்கொலை முயற்சியைத் தடுக்கவே மணவாளன் சமாதான வார்த்தைகளைக் கூறினான். அவளது திருமணத்திற்குப்பின் மணவாளன், தான் இறந்துவிட்டதாகக் கதை கட்டிவிட்டு எங்காவது சென்றுவிட்டால், அவள் புதிய காதலனுடன் மனவருத்தம் நீங்கி மகிழ்ச்சியுடன் வாழ்வாள் என்ற எண்ணத்தில்தான் அவளுக்குத் தற்காலிகச் சமாதானமாகக் கூறினான். மணம் முகிழ்க்கும் மல்லிகா இல்லாத வாழ்வு எப்படி இருக்கும் என்பதை ஒருகணம் சிந்திக்கவே, அவனால் வேதனையைப் பொறுக்க முடியவில்லை. எனினும், "என் செய்வது?" என்ற கேள்விக்குறிக்கு விடை காணவே தலைப்பட்டான்.

★

மணவாளனும், தன் காதல் ஏக்கத்தையும் தாபத்தையும் வெளிக்காட்டாதவாறு-குமுறும் உள்ளத்தை அமைதிபடுத்திக் கொண்டே, ஆளோடு ஆளாகத் திருமண வேலைகளில் ஈடுபட்டான்.

மணவாளன், நடுத்தர குடும்பத்தைச் சேர்ந்தவன்தான். சென்னையில் 'பி. எஸ்சி' பட்டப்படிப்புப் படிப்பதற்காக வந்தவன். அவனது தந்தை ஆறுமுகமும் மல்லிகாவின் தந்தை தர்மலிங்கமும் நீண்ட நாளைய நெருங்கிய நண்பர்கள். அந்த உறவில்தான் தர்மலிங்கம் தம் இல்லத்துமேல் மாடியின் ஓர் அறையிலேயே அவன் தங்கிப் படிப்பதற்கு வசதி செய்து கொடுத்திருந்தார். அதன் விளைவுதான் மணவாளன்-மல்லிகா காதல் பயிர்! உள்ளமொன்றிய உண்மைக் காதலர்களாகத் திகழ்ந்தனர். அவர்களது அன்பிலே சிதைவும், பாசத்திலே பிளவும், காதலிலே களங்கமும் காணமுடியாது. திருமண விழாவைக் காணக்காண மணவாளனுக்கும் மல்லிகாவிற்கும் இதயம் வெடித்துச் சுக்கல் சுக்கலாகச் சிதறுவது போலிருந்தது.

எனக்கோ, நண்பன் மணவாளனின் முகவாட்டத்தையும், மல்லிகாவின் முகத்தில் மலர்ச்சியின்மையையும் காணக் காணப் பரிதாபமாகத்தான் இருந்தது. எனினும் ஒன்றும் பேசிக்கொள்ளாமல் வருபவர்களையெல்லாம் வரவேற்பதில் ஈடுபட்டுக்கொண்டிருந்தேன்.

ஊரிலிருந்து இன்னும் மாப்பிள்ளை வந்து சேரவில்லை. 'காரை' எடுத்துக்கொண்டு புகைவண்டிநிலையத்திற்குச் செல்வதும் வருவதுமாக நேரந்தான் போய்க்கொண்டிருந்தது. ஆனால் மாப்பிள்ளை வந்து சேர்ந்தபாடில்லை.

"திருமணத்திற்கு முந்திய நாளே வருவதாகக் கடிதம் எழுதியிருந்தவர்கள், திருமணத்தன்றாவது குறிப்பிட்ட நேரத்திற்கு வந்து சேரக்கூடாதா?" என்று தர்மலிங்கம் மனம் வெதும்பினார். மாப்பிள்ளையை உடனிருந்து கூட்டி வருவதற்காக தன் அண்ணன் மகன் கண்ணப்பனையும் அனுப்பியிருந்தார். "அவனாவது நிலைமையை விளக்கி ஒரு தந்தியைக் கொடுக்கக் கூடாதா?" என்று உள்ளத்திற்குள் கடிந்துகொண்டார்.

மல்லிகாவின் தாயாரோ, தன் உள்ளமெல்லாம் கருகி, உடலெல்லாம் உருகி நீராக ஓடுவதுபோன்ற பிரமையில் விம்மிக்கொண்டிருந்தாள். தான் பெற்ற பிள்ளைகளையெல்லாம் சாவின் வாயிலே போட்டுவிட்டுக் கடைசியாகப் பிறந்த இந்த மல்லிகாவை எண்ணியாவது மகிழ்ச்சி பெற வேண்டாமா? தனக்கு எத்தனையோ வயதுக்கு இளையவர்களெல்லாம், தம் மக்களுக்குத் திருமணம் செய்து பேரன் பேத்தி கூட எடுத்துவிட்டார்கள். ஆனால் கற்பகவல்லியம்மாளுக்கு எஞ்சிய ஒரு பெண்ணுக்குத் திருமணம் முடிப்பதில்கூடத் தடை ஏற்பட்டுள்ளதே. காரைப் போட்டாவது ஊருக்குச் சென்று மாப்பிள்ளையைக் கூட்டி வர வேண்டுமென்று கணவருக்குக் கட்டளையிட்டாள். அவரும், அடுத்த இரயிலைப் பார்த்துவிட்டுப் பிறகு ஊருக்குச் சென்று மாப்பிள்ளையைக் கூட்டி வர வேண்டுமென்று இரயிலடிக்குச் சென்றார்.

இரயிலும் வந்தது. தர்மலிங்கம் பிள்ளை இறங்கியவர்கள் எல்லோரையும் ஆவல் ததும்ப நோக்கினார். தன் அண்ணன் மகன் கண்ணப்பனின் தலையைப் பார்த்ததும் பெருமகிழ்ச்சியடைந்தார். ஆனால் அவனைத் தவிர வேறு யாரும் அவனுடன் காணாததால் ஏமாற்றமடைந்தவராய், விவரம் கேட்டார்.

"மணப்பெண் பிடிக்கவில்லையாம். ஆகவே மாப்பிள்ளை வேறு பெண் பார்த்துவிட்டாராம். செலவு தொகையில் பாதியை ஒத்துக்கொள்வதாகவும் சொல்லிவிட்டார்கள்" என்று கண்ணப்பன் கூறினான்.

தர்மலிங்கமும் அவரது மனைவி கற்பகவல்லியம்மாளும், சத்தம் போட்டு அழுவதா, அலறுவதா? கதறுவதா, கண்ணீர் விடுவதா? என்றறியாமல் திகைத்தார்கள். ஒரே மகளுக்காக எச்செலவையும் பொருட்படுத்தாது ஏற்பாடு செய்துள்ள திருமணம். இவ்வளவு ஏற்பாடுகளும் வீணாவதா? விருந்திற்காகச் செய்துள்ள செலவை வைத்துப் பத்துப் பதினைந்து திருமணங்களைச் செய்துவிடுவார்கள், நடுத்தர குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். மாப்பிள்ளை வீட்டிற்குள் காலெடுத்துப் புகும்போது, வைரமிழைத்த தங்கச் சங்கிலியுடன் கூடிய உயர்ந்த ரகக் கைக்கடிகாரத்தையும் மாப்பிள்ளையின் கையில் கட்டி அழகு பார்க்க வேண்டுமென்று வாங்கி வைத்திருந்தார், "எல்லா ஏற்பாடுகளும் வீண்தானா?" என "கோ"வென்று கதறியேவிட்டார் தர்மலிங்கம்.

திருமணத்தை நிறுத்துவதில் அவருக்கும் அவர் மனைவிக்கும் கொஞ்சங்கூட விருப்பமில்லை. "முகூர்த்தத்திற்கு இன்னும் சில விநாடிகளே இருக்கின்றன. இதற்கு வேறு வழியே கிடையாதா?" என்று தர்மலிங்கத்தைக் கற்பகவல்லியம்மாள் தாளாத சோகத்துடன் கேட்டாள்.

உடனே அவரது மூளை முனைந்து நின்று வேலை செய்ய ஆரம்பித்தது. வாரியிறைத்த பொருளை வழித்தெடுத்துப் போட்டுக்கொள்வது போல், "ஒரு விநாடியில் மணமகனாகப் பந்தலில் வந்து உட்கார். வேறொன்றையும் மனத்திலே போட்டுக்கொள்ள வேண்டாம். நாங்கள் சைவப் பிள்ளையாச்சே; நீங்கள் சாதாரணப் பிள்ளைதானே. அதுவுமில்லாமல் ஆச்சார சீலர்களெல்லாம் அவமதிப்பாகப் பேசுவார்களே என்றுதான் முதலில்... உன் மீது எனக்கும் உன் அத்தைக்கும் எவ்வளவு பிரியம் தெரியுமா? அது உனக்கே தெரியும்!" என்று கனிவு மொழிகளையெல்லாம் வீசி, அன்புக்கட்டளையிட்டார் மணவாளனுக்கு.

"சைவப் பிள்ளையோ? சாதாரணப் பிள்ளையோ? ஆக உங்கள் பெண் பிள்ளைக்கேற்ற ஆண்பிள்ளைதானே நான்?" என்று கூறவில்லை. அந்தக் கருத்தின் குறிப்பை முகத்திலே பிரதிபலித்துக்கொண்டவனாய்க் குறித்த நேரத்தில் மணமகனாக மகிழ்ச்சி முறுவலிக்க வந்தமர்ந்தான்.

யாரும் இதனை எதிர்பார்க்கவில்லை. திருமணத்திற்கு வந்திருந்த அனைவரும் திகைப்படைந்தனர்; வியப்படைந்தனர். பின்...? "பல்லாண்டு வாழ்க!"வென வாழ்த்தினர். மல்லிகாவின் கண்களிலே கதிரொளி சதுராடிற்று. எனக்குள் நான் சிரித்துக்கொண்டேன். "சற்று முன்பு பார்க்க வேண்டுமே நண்பனையும் நங்கையையும்" என்று மணவாளனை நோக்கிக் கூறினேன். அசட்டுச்சிரிப்புடன் நங்கைக்கு மாலையிடுவதில் கவனம் செலுத்தினான்.

என்னுடன் வந்திருந்த திருச்சி நண்பன் திருஞானம் மணமக்களின் பெயர்களின் முதல் எழுத்துக்கள் பொறித்த இரு மோதிரங்களைப் பரிசாக அளித்தான். பின் தர்மலிங்கத்திற்குத் தெரிந்த பிரமுகர்கள் விலையுயர்ந்த பலவகைப் பொருள்களைக் கொடுத்து கடனைத் தீர்ப்பதுபோல் பரிசளித்துக் கொண்டிருந்தார்கள். வந்திருந்தவர்களெல்லாம் திருமணத்தின் ஒவ்வொரு 'அம்சங்களையும்'

— 12-ம் பக்கம் —

மல்லிகைப் பந்தல்

9. புளியமரத்து ராக்கப்பன்

அடுத்த வீட்டு ராதாவும் தங்கமும் கோயிலுக்குப் போய்த் திரும்பி வந்துகொண்டிருந்தார்கள். சென்ற வழியாகவே திரும்பி வந்துகொண்டிருந்தபோது ஒரு சந்து முனைக்கு வந்ததும் ராதா, தங்கத்தின் கையைப் பிடித்து இழுத்து நிறுத்தினாள். அவள் தன்னை நிறுத்திய காரணம் புரியாமல் தங்கம் ராதாவை நோக்கினாள்.

''தங்கம் நாம் இந்தப் பாதையாகப் போக வேண்டாம். மேட்டுத் தெருப் பக்கமாகப் போகலாம்'' என்றாள் ராதா.

''இந்தச் சந்தில் போய்த் திரும்பினால் நம் வீதி வந்துவிடும். மேட்டுத் தெரு போய்த் திரும்புவதென்றால் மூன்று வீதி தாண்டி வர வேண்டுமே!'' என்று சலித்துக்கொண்டாள் தங்கம்.

''மூன்று வீதி தாண்டி நடந்தால் கால் வலியோடு போகும். அதைப் பார்த்தால் இந்தச் சந்தில் போய் என்னமும் ஆகிவிட்டால் என்ன செய்வது?'' என்று கேட்டாள் ராதா.

''என்ன ஆகும்?'' புரியாமல்தான் கேட்டாள் தங்கம்.

''என்ன ஆகுமா? ஏண்டி தங்கம். நீ இந்த ஊரில்தான் இருக்கிறாயா? இந்தச் சந்தின் அந்த முனையிலே இருக்கிறதே புளிய மரம்-அந்தப் புளிய மரத்திலே...ராத்திரி நேரத்தில் அந்தப் பக்கம் போகக்கூடாதடி. அதுவும் பெண் பிள்ளைகள் தனியாகப் போனால் அது வசமாகப் பிடித்துக் கொண்டுவிடுமாம்'' என்று நடுநடுங்கிக் கொண்டே சொன்னாள் ராதா.

இதைக் கேட்டுத் தங்கம் சிரித்தாள். அவள் குரலோடு இன்னொரு குரலும் சேர்ந்து சிரிப்பதுபோலிருந்தது. இரு பெண்களும் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தார்கள்.

''பயப்படாதீர்கள்! நான் புளிய மரத்துப் பிசாசல்ல. சாதாரண மனிதன் நடராசன்தான்!'' என்று சொல்லிக் கொண்டு நெருங்கி வந்தான் நடராசன்.

''நானும் இந்தச் சந்து வழியாகத்தான் போக வேண்டியிருக்கிறது. நீங்கள் பயப்படாமல் என்னோடு வரலாம்'' என்று முன் நடந்தான் நடராசன். இரண்டு பெண்களும் அவனைப் பின் தொடர்ந்தார்கள். தங்கத்திற்குப் பிசாசைப்பற்றிப் பயமேயில்லை. ஆனால், ராதாவிற்கு உள்ளே நெஞ்சு திருதிருவென்றுதான் இருந்தது.

நடராசன் ராதா பக்கம் நோக்கி, 'ராதா, புளிய மரத்துக்குப் பிசாசு எப்படி வந்தது? கொஞ்சம் சொல் பார்க்கலாம்'' என்று கிண்டலான குரலில் கூறினான்.

''இந்த இடத்தில் நான் அதைச் சொல்லமுடியாது'' என்று பயத்தோடு கூறினாள் ராதா.

''அப்படியானால், அந்தப் புளிய மரத்தடியிலேயே சொல்கிறாயா?'' என்று கேட்டான் நடராசன்.

''பைத்தியம்! பைத்தியம்! இன்ன இடத்தில் இன்னதுதான் பேச வேண்டுமென்று தெரியாது உனக்கு'' என்று கடிந்துகொண்டாள் ராதா.

''ஐயோ! பைத்தியமாம் பைத்தியம்! யாருக்குப் பைத்தியம்! இந்த ஊரிலே எத்தனையோ பைத்தியங்கள் இருக்கின்றன. பணப் பைத்தியம், பதவிப் பைத்தியம், பெண் பைத்தியம், சோஸ்யப் பைத்தியம், சாஸ்திரப் பைத்தியம், சகுனப் பைத்தியம், பிசாசுப் பைத்தியம், இப்படி எத்தனையோ இருக்கின்றன. அதையெல்லாம் விட்டுவிட்டு எல்லோரும் என்னைப் பைத்தியமென்கிறார்கள். நீ ஒரு பிசாசுப் பைத்தியம், நீ பார்த்து என்னைப் பைத்தியமென்றால் எப்படி?'' என்று உள்ளுக்குள்ளே தனக்கிருந்த கோபத்தையடக்கிக் கொண்டு நிதானமாகக் கேட்டான் நடராசன்.

நாரா நாச்சியப்பன்

''அடி ஆத்தே! இவனுக்கு இவ்வளவு பேசத் தெரிந்தது எப்படியடி தங்கம்?'' என்று வியப்புடன் கேட்டாள் ராதா.

'ராதா! இப்போது இவருக்குப் பைத்தியமில்லை. அதெல்லாம் தெளிந்துவிட்டது'' என்று அவள் காதுக்குள் கூறினாள் தங்கம். நடராசன் முன்பு பைத்தியமாயிருந்தான் என்றுகூட அவன் முன்னால் சொல்ல அவளுக்கு ஏனோ நாவெழவில்லை.

''ராதா! நல்லதுக்குத்தான் கேட்கிறேன். அந்தப் பிசாசு வந்த கதையைக் கொஞ்சம் சொல்லேன். இங்கேயே நின்று வேண்டுமானாலும் சொல், நீ சொல்லி முடித்ததும் நாம் நடக்க ஆரம்பிக்கலாம்'' என்றான் நடராசன்.

''சொல்லடி, அவர்தான் கூட இருக்கிறாரே! என்ன பயம்?'' என்று தங்கமும் ஊக்கப்படுத்தினாள்.

ராதா சொன்னாள்.

'நம் ஊரிலே ராக்கப்பன் என்று ஒருவன் இருந்தான். அவன் சின்ன வயதிலேயே திருட்டு, குடி, சூது என்று கெட்டலைந்தான். கடைசியில் அவனுக்குக் கலியாணம் செய்து கொண்டு குடும்பம் நடத்தி வாழ வேண்டுமென்று தோன்றியது. ஆனால், ஊரிலே ஒருவர்கூடப் பெண் கொடுக்க மாட்டேன் என்று சொல்லிவிட்டார்கள். அவன் தான் திருந்தி வாழுவதாகக் கோயிலிலே சத்தியம் பண்ணிக் கொடுப்பதாகக் கூறியும்கூட எந்தப் பெண்ணும் அவனைக் கட்டிக்கொள்ள முன் வரவில்லை. இதனால் துக்கமடைந்த அவன், இந்தப் புளிய மரத்திலே ராத்திரி நேரத்திலே வந்து தூக்குப் போட்டு மாட்டிக்கொண்டு செத்துப்போய்விட்டான். இப்போது ஆவியுருவத்தில் இருந்துகொண்டு தினமும் ராத்திரி நேரத்தில் ஆண் துணையில்லாமல் தனியாக வரும் பெண்களைப் பிடித்துக்கொள்கிறானாம்'' என்றாள் ராதா.

''இதுவரை யாரையும் அவன் பிடித்திருக்கிறானா?''

''இல்லை, சில பேரைப் பயமுறுத்தியிருக்கிறான். அவர்கள் பயந்து காய்ச்சலாகக் கிடந்திருக்கிறார்கள். பெரும்பாலும் பெண்கள் இந்த வழியாகப் போவதேயில்லை''

''சரி, பயந்து காய்ச்சலானவர்களை என்ன செய்வார்கள்?''

''கோயில் குருக்களையாவிடம் கூட்டிச் செல்வார்கள். அவர் விபூதிமந்திரித்துக் கொடுப்பார். பிறகு காய்ச்சல் நின்று குணமாகிவிடும்.'' என்றாள் ராதா.

''ராதா, நான் சொல்வதைக் கவனி. ஆவி என்பதாக ஒன்று கிடையாது. வெளியில் உள்ள காற்றுத்தான் நம் மூக்கின் வழியாக உடலுக்குள்ளே போய்ப் போய் மீள்கிறது. இதைத்தான் மூச்சு விடுதல் என்கிறோம். உடம்பு நன்றாக இருக்கும்வரை மூச்சு ஒழுங்காக ஓடிக்கொண்டிருக்கும். உடம்புக்குக் கோளாறு என்றால் மூச்சு ஓட்டத்தின் வேகமும் மாறிவிடும். இந்த மூச்சு ஓட்டம் நின்று போனால்தான் மனிதன் செத்துப்போகிறான். அவன் எப்படிப்பட்ட சாவை யடைந்தாலும் மூச்சு நின்றதும் மூக்கில் ஓடிக்கொண்டிருந்த காற்று, காற்றோடு காற்றாகக் கலந்துவிடுகிறது; அது ஆவியாகவோ பிசாசாகவோ அலைவதோ திரிவதோ கிடையாது. ஒருவன் தூக்குப்போட்டுக் கொண்டு செத்துவிட்டால் அவன் பிசாசாகி விடுகிறான் என்பது நம் கற்பனைதான். இந்தக் கற்பனையை உண்மையென்று நம்புவதால்தான் நாம் அந்த இடத்தில் செல்லும்போது பயத்தோடு செல்கிறோம். அவ்வாறு பயத்தோடு செல்வதால் அந்த இடத்தை யடைந்ததும் அது அதிகரித்து நம்மை அதிர்ச்சியடையச் செய்துவிடுகிறது. இதனால்தான் காய்ச்சல், நடுக்கம் எல்லாம் உண்டாகின்றன. பூசாரி விபூதி மந்திரித்தவுடன், பிசாசு நம்மை விட்டு நீங்கிவிடுவதாக நம்பி மனந் தெளிகிறோம். நம் நோயும் பறந்துவிடுகிறது. தெரிகிறதா?'' என்று கேட்டான் நடராசன்.

''தெரிகிறது'' என்று ராதா சொல்லி வாய் மூடுமுன் திடீரென்று அந்தச் சந்தின் மறுகோடியிலிருந்த புளியமரத்தின் கிளைகள் பலமாகக் குலுங்கிய சத்தமும். அதன் பழங்கள் உதிர்ந்து விழுகிற ஓசையும் கேட்டன.

'ஐயோ! பிசாசு!'' என்று கத்திக் கொண்டே ராதா நடராசனைப் பிடித்துக் கொண்டாள். ''ஆ!'' என்று கூவிக் கொண்டே தங்கமும் அதிர்ச்சியுடன் அவனைத் தழுவினாள். சட்டென்று ஏற்பட்ட அந்தச் சத்தத்தைக் கேட்டுப் பிரமித்து நின்ற நடராசன் அவர்கள் இருவரையும் தாங்காமல் சாய்ந்து தரையில் வீழ்ந்தான். அவனோடு அந்தப் பெண்களும் கீழே வீழ்ந்து மூர்ச்சையடைந்து போனார்கள்.

கீழே விழுந்த நடராசன் தன்னைத் தானே நம்ப முடியாத அளவு திகைத்துப் போயிருந்தான். விழுந்து கிடந்தபடியே சுற்றிச் சூழ்ந்திருந்த இருட்டை உற்று நோக்கினான். அவன் கண்ணுக்கு எதுவும் புலப்படவில்லை. ஆனால், அவன் காதிலேதான் அந்தப் புளிய மரத்தின் கிளைகள் விட்டுவிட்டுக் குலுங்கிக் கொண்டிருந்த ஓசை கேட்டது. அவன் திக்பிரமை பிடித்தவன் போல் ஆனான். கிடந்த இடத்தை விட்டு எழுந்திருக்கவும் பயமாயிருந்தது. பக்கத்திலே விழுந்து கிடந்த அந்தப் பெண்களோ மூச்சுப் பேச்சற்று இந்த உலக ஞாபகமே இல்லாதவர்களாக அசைவற்றுக் கிடந்தார்கள். நடராசனுக்கும் பயம் கொண்டுவிட்டது. சிறிதுசிறிதாக அவன் உள்ளத்திலே பீதி அதிகரித்துக்கொண்டு வந்தது. இந்த நிலையே நீடிக்குமானால், அவனும் அந்தப் பெண்களின் கதியை அடையக்கூடிய நிலை உருவாகிக் கொண்டிருந்தது. அப்போது மறுகோடியிலே ஒரு லாந்தர் விளக்குத் தோன்றியது அதைக் கண்ட பிறகுதான் நடராசனுக்கு உயிர் வந்தது போல் இருந்தது. விளக்கைக் கண்டால்-அல்லது நெருப்பைக் கண்டால் பிசாசு ஓடிவிடும் என்று சொல்வார்களே என்று நினைத்துக்கொண்டு அவன் மெல்ல எழுந்திருந்தான்-ஆனால் மறு பக்கத்திலிருந்து விளக்கொளி நெருங்கி நெருங்கி வந்து கொண்டிருந்ததே தவிர. புளிய மரத்தின் ஆட்ட ஓசை நிற்கவேயில்லை. காற்றில்லாத நேரத்திலே, அதுவும் மரத்தின் ஒன்றிரண்டு கிளைகள் மட்டுமே அப்படி ஆடுவது என்றால் அது எப்படிமுடியும்? அது பிசாசாகத்தான் இருக்க வேண்டும். ஆனால், அது நெருப்பைக் கண்டு ஓட்டம் பிடிக்கக் காணோமே.! இவ்வாறு நடராசன் மனம் அப்படியும் இப்படியும் எண்ணிப் பார்த்துக்கொண்டிருந்தபோது, அந்த விளக்கொளி மரத்தை யடைந்தது. மரக்கிளைகள் குலுங்கும் ஓசையும் நின்றது. அதைத் தொடர்ந்து பழங்

கள் உதிரும் ஓசையும் நின்றது. அதே சமயத்தில் நடராசனின் காதில் இந்தப் பேச்சுக் குரலும் தெளிவாக விழுந்தது.

'முனியா, சீக்கிரம் இறங்கி வா. யாரும் வருவதற்குள் பழங்களையெல்லாம் பொறுக்கிக்கொண்டு போய் விடலாம்''

''இதோ வருகிறேன். காத்தா, சாக்குக் கொண்டு வந்திருக்கிறயல்லவா?''

யாரோ மரத்திலிருந்து சரசரவென்று இறங்கும் ஓசை கேட்டது.

நடராசன் புரிந்துகொண்டான். மரத்தைக் குலுக்கியது ஆவியுலகத்து ராக்கப்பனல்ல-பூலோகத்து முனியன் தான். காத்தனும் முனியனும் புளியம் பழம் களவாட வந்திருக்கின்றனர்என்ற விஷயம் அவனுக்கு விளங்கிவிட்டது.

அவனுக்கு ஓர் யோசனை தோன்றியது. ''ஆ! களவாடி! களவாடி!'' என்று கத்தினுன்.

அவ்வளவுதான், காத்தனும் முனியனும் காற்ருய்ப் பறந்தார்கள். அவர்கள் ஓடிய வேகத்தில் புளியம்பழம் அள்ளக் கொண்டு வந்திருந்த சாக்குப் பைகளையும், லாந்தர் விளக்கையும் விட்டுவிட்டுப் போனுர்கள். நடராசனுக்குக் கொஞ்சநஞ்சம் இருந்த பயமும் தெளிடைந்தது சற்றுமுன் கத்துகின்றபோது கூட, எங்கே அந்தத் திருடர்கள் தன்னை வந்து தாக்குவார்களோ என்ற பயம் இருந்தது. இப்போது அதுவும் பறந்து போய்விட்டது. ஒரு மனிதனுடைய குரலுக்குப் பயந்து ஓடுகின்ற அந்த உருவங்கள் பிசாசாக இருக்க முடியாதென்று அவன் நிச்சயமாக எண்ணினுன். லாந்தர் விளக்கை அந்தத் திருடர்கள் விட்டுவிட்டுப் போனது அவனுக்கு இன்னெரு வகையில் நல்லதாகத் தோன்றியது-அந்தப் பெண்கள் இருட்டில் கண் விழித்தால். எதிரில் தெரிகிற உருவமெல்லாம் பிசாசாசகவே தோன்றக்கூடும்; அதனுல் அவர்கள் பயந்து அலறக் கூடும்; மறுபடி மூர்ச்சித்து விழவும் கூடும். அவன் மெல்ல எழுந்து நடந்து சென்று அந்த லாந்தர் விளக்கை எடுத்துக்கொண்டு வந்தான். அந்தப் பெண்கள் படுத்திருந்த இடத்தின் அருகில் அதை வைத்தான். அதன்பிறகு என்ன செய்வதென்று அவனுக்குத் தெரியவில்லை.

அவர்கள் மூர்ச்சை தெளியும்வரை அங்கேயே இருப்பதா; அல்லது போய் யாரையாவது கூட்டிக்கொண்டு வந்து அந்தப் பெண்களைத் தூக்கிக்கொண்டு போய் அவரவர்கள் வீட்டில் சேர்ப்பதா என்று அவன் யோசித்தான். பிறர் உதவியை எதிர்பார்ப்பதையோ அல்லது அங்கு காத்துக்கொண்டிருப்பதையோவிடத் தானே ஏன் அந்தப் பெண்களை ஒவ்வொருவராகத் தூக்கிச் சென்று அவரவர்கள் வீட்டில் விட்டு வரக்கூடாது என்று அவனுக்கு இன்னுேர் யோசனை உண்டாகியது. அதுதான் சரியென்று அவன் முடிவுக்கு வந்தான்.

தங்கம் தைரியசாலி என்பது அவன் எண்ணம். ஆகவே முதலில் ராதாவைத் தூக்கிக்கொண்டுபோய் அவள் வீட்டில் விட்டுவிடுவதென்றும், தான் திரும்பும் வரையில் தன்னந் தனியாகக் கிடக்கும் தங்கம் விழித்துக்கொண்டாலும் ராதா அளவு பயப்பட்டுவிடமாட்டாள் என்றும் அவன் எண்ணினுன். தங்கம் விழித்துக்கொண்டால் பயப்படாமல் இருப்பதற்காக லாந்தரை அங்கேயே விட்டுவிட்டு ராதாவைத் தோளில் சாய்த்துப் போட்டுக்கொண்டு மெல்ல மெல்ல நடந்து சென்ருன்.

போகும் வழியிலேயே ராதா கண் விழித்துப் பார்த்தாள். கண்விழித்த உடனே அவளுக்குத் தெரிந்தது சுற்றிச் சூழ்ந்திருந்த பயங்கரமான இருள் தான். சற்று உணர்வு வந்த பிறகு தான், தான் தூக்கிச் செல்லப்படுவதை உணர்ந்தாள். புளிய மரத்து ராக்கப்பன்தான் தன்னைத் தூக்கிச்செல்கிருனே என்று அவளுக்கு ஓர் எண்ணம் உதித்தது. அந்த எண்ணம் உதித்த உடனே அவள் இதயத்திலே ஒரு படபடப்பு—அவள் அங்கங்களிலே ஒரு நடுநடுக்கம் உண்டாகியது. அவளைத் தோளில் சாய்த்துத் தூக்கிக்கொண்டு போன நடராசனுக்கு அந்தப் படபடப்பும் நடுநடுக்கமும் நன்ருகத் தெரிந்தன. அவள் இதயம் படபடவென்று அடிப்பதுஅவன் தோளில் விட்டுவிட்டு மென்மையாக இடிப்பதுபோல் இருந்தது. அவளுடல் உறுப்புக்கள் நடுங்கியபோது ஏற்பட்ட அசைவுகள் அவன் உடலைத் தாக்காமல் விட்டுவிடவில்லை. ஆகவே, அவள் விழித்துக்கொண்டுவிட்டாள் என்பதையறிந்த அவன், ''ராதா, பயப்படாதே! ராக்கப்பனை விரட்டியடித்துவிட்டேன்.'' என்ருன். ''உண்மையாகவா?'' என்று கேட்டுக்கொண்டே அவள் கீழே குதித்தாள். ஆனுல், அவள் பயம் முற்றிலும் போய்விடவில்லை யாகவே, அவன் கையை இறுக்கிப் பிடித்தவாறு அவனை ஒட்டிக்கொண்டே நடந்து சென்ருள். அவர்கள் அப்படி நடந்து போய்க் கொண்டிருந்தபோது, திடீரென்று ராதா நடராசனைக் கட்டித் தழுவிக்கொண்டாள். அவள் உடலெல்லாம் வெடவெடவென்று நடுங்கியது. குப்பென்று வியர்த்துப்போய்விட்டது. ''அதோ பார்த்தீர்களா?'' என்று கிணற்றுக்குள்ளிருந்து பேசுவது போலப் பேசினுள். அவள் குறிப்பிட்டுக்காட்டிய பக்கம் உற்றுப் பார்த்த நடராசனுக்கு ஒன்றும் புலப்படவில்லை. ''என்ன? ஒன்றும் தெரியவில்லையே?'' என்று கேட்டான். ''அதோ நேரே பாருங்கள். ஏதோ நிழலாடுவதுபோல் அசைகிறது!'' என்று சுட்டிக்காட்டினுள் ராதா. ஆனுல், நடராசன் பார்த்த போது எதுவுமே தெரியவில்லை. ''ஒன்றும் தெரியவில்லையே!'' என்று மறுபடியும் கூறினுன். ''ஆம்! இப்போது அதைக் காணேம்.'' என்ருள் ராதா. ''சும்மா வா! நீ மிகவும் குழம்பிப்போய் இருக்கிருய். காணுகின்ற நிழல் எல்லாம் உனக்குப் பேயாகத் தோன்றுகிறது. பேசாமல் கண்ணை மூடிக்கொண்டு என் கையைப் பிடித்துக்கொண்டு நடந்து வா!'' என்ருன் நடராசன்.

ராதாவின் வீட்டிற்கு அவர்கள் தங்கத்தின் வீட்டைக் கடந்துதான் போக வேண்டும். தங்கத்தின் வீட்டில் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. அவர்கள் வீட்டு வாசலிலும் மின்சார விளக்குப் போடப்பட்டிருந்தது. அந்த வெளிச்சத்தில் வந்தவுடன் ராதா, நடராசனை விட்டுச் சிறிது விலகிக்கொண்டாள். அவ்வளவு நேரமும் இல்லாத வெட்க உணர்ச்சி அவளுக்கு அப்போது வந்துவிட்டது! அவ்வளவு நேரமும் இருந்த அதிதீவிரமான அச்ச உணர்ச்சி அந்த வெட்க உணர்ச்சியை அடக்கிவைத்திருந்தது. ஆனுல், அந்த அச்சம் குறைந்தவுடன், வெட்கம் திரும்பவும் தன்னுடைய இடத்தைப்பிடித்துக் கொண்டுவிட்டது.

அப்போதுதான் ராதாவுக்குத் தங்கத்தின் ஞாபகம் வந்தது. ''தங்கம் எங்கே?' என்று கேட்டாள். ''அந்த இடத்திலேயேதான் கிடக்கிருள்'' என்று பதில் சொன்னுன் நடராசன்.

''ஐயையோ! தனியாகவா கிடக்கிருள்? பயமாக இருக்குமே! நான் அவர்கள் வீட்டில் போய்ச் சொல்லி விட்டு வருகிறேன்'' என்று தங்கத்தின் வீட்டுப் பக்கமாகப் பாய்ந்தாள் ராதா.

(தொடரும்)

பார்க்கப் பார்க்க அழகு!
படிக்கப் படிக்க இன்பம்!

நாரா நாச்சியப்பன்
எழுதிய

சிறுவர் பாட்டு

- சிறு குழந்தைகள் ஆடிப்பாடி மகிழ்வதற்கேற்ற அருமையான பாட்டுப் புத்தகம்.
- பக்கத்துக்குப் பக்கம் வண்ணப் படங்களுள்ள அழகான பாட்டுப் புத்தகம்.
- குழந்தைக் கவிஞர் திரு. அழ. வள்ளியப்பா அவர்களின் முன்னுரையுடன் வெளிவந்திருக்கிறது.

விலை ஒரு ரூபாய்

விற்பனையாளர்க்கும் பத்துப் புத்தகங்கள் ஒன்ருக வாங்குவோர்க்கும் 25% தள்ளுபடி.
எல்லோர்க்கும் அஞ்சற் செலவு இலவசம்.

வெளியிட்டோர்:
தாமரைப் பதிப்பகம்,
97, பிராட்வே, சென்னை-1.



"வேங்கடத்து வெங்காயத்தைப் பற்றி எழுத வேண்டாம்! அந்தப் பிறவிக்கு என்ன தெரியும்? எதையும் முறையாகப் படித்ததுமில்லை; ஒழுங்காக அறிந்ததுமில்லை! அதைப் போய் ஏன் தொடுகிறாய்?" என்று நண்பர்கள் பலர் பல நேரங்களில் நேரடியாகச் சொன்னார்கள்; சிலர் கடிதம் எழுதினர். நானும் அப்படித்தான் நினைத்தேன். ஆனால் அண்மையில் அந்த "எல்லைக்காவலர்" உலா ஒன்று வந்ததைக் கண்டேன்; அதன் பின்னர் முடிவில் கூட்டம் ஒன்றில் "பேசியதையும்" கேட்டேன்: பின்னர்தான் உணர்ந்தேன், நண்பர்கள் எவ்வளவு தப்புக் கணக்குப் போட்டு விட்டனர் என்று!

அந்த இருசப்ப கிராமணித் தெருச் சாக்கடை, கோயபெல்சிடம் பாடம் கேட்டிருக்கிறதய்யா, கோயபெல்சிடம்! உடன் உட்கார்ந்து அதன் "பேச்"சைக் கேட்ட நண்பரொருவர், "தகரமுரசுக் கழகத் தலைவருக்குள்ள தகுதியும் திறமையும் இதுதானய்யா! கோயபெல்சின் பரம்பரை என்ற தகுதி ஒன்றுதானய்யா, இவரை இத்தனை நாள் உலவ விட்டிருக்கிறது!" என்றார். நானும் மறுக்காது ஒப்புக்கொண்டேன்

கோடி கோடி மக்கள் திரண்டிருந்தனர் அந்தக் கூட்டத்தில். அதாவது கூட்டம் நடந்த மைதானத்தின் நான்கு கோடிகளிலும் நான்கு நான்கு பேர் அமர்ந்து சிறப்பாகக் கேட்டனர். அவர்களை "நான்கு கோடித் தமிழர்கள்" என்று குறிப்பிட்டால் தவறில்லையல்லவா?

பேச்சைத் தொடங்கும்போதே தி. மு. கழகத்தைத் திட்டிக்கொண்டே தொடங்கியது. அதிலும் அது தனது வழக்கமான கோயபெல்சுப் பாணியில் தொடங்கியது. இந்தத் திருப்பதி மொட்டை வருகின்றதென்று, ஊர்வலம் வரும் வழியில் இருந்த தி. மு. க. தோழர்கள் புதுக்கொடியைக் கட்டி விட்டனராம்.

"ஒன்றிரண்டு இடங்களில் தி. மு. கழகத்தார் புதுக்கொடிகள் பறக்க விட்டிருப்பதாக நம் தோழர்கள், சொன்னார்கள். அதை எண்ணி அயரவேண்டாம், நம் தோழர்கள்! அவர்கள் புதுக்கொடி கட்டியதன் பொருள் என்ன? வேறொன்றுமில்லை! அது வரவேற்பு! இந்தச் சவஞானம் வருவதைக் கண்டு புதுக்கொடி கட்டிப் பறக்க விடுகிறார்கள்!" என்று மிடுக்காகப் பேசித் தன் நாநயத்தைக் காட்டியது அந்த மேதை!

நண்பர் அதை மறுத்தார். ஒன்றிரண்டு இடங்களில் கழகக் கொடிகளைப் பார்த்ததாக அலட்சியமாக ம. பொ. சி. சொன்னது முதல் தவறு. வண்ணாரப் பேட்டையில் வாழும் ஆர்வம் மிக்க நம் தோழர்கள் ஆங்காங்கே தமது பல மன்றங்களிலும் கொடி ஏற்றி வைத்திருக்கிறார்கள். ஆனால் அந்தக் கொடிகள் வேங்கடத்து வெங்காயத்தின் வருகையை ஒட்டி ஏற்றப்பட்டவையல்ல. ஏற்கனவே மே முதல் நாளன்று பொதுச்செயலாளர் அவர்களின் ஆணைப்படி, தொழிலாள வர்க்க நாளைக் கொண்டாடும் முறையில் ஏற்றப்பட்ட கொடிகள், அவை! ஒன்றரைத் திங்களுக்குப்பின் அந்த வழிகளில் மூன்றரைக் குண்டர்களுடன் ஊர்வலம் வந்த "திருத்தணி உண்டைக் கட்டி" பொய்க் கதை அளந்தது இரண்டாம் தவறு. ஏற்கனவே ஏற்றப்பட்டிருந்த கொடிகளை, தன் வருகையை யொட்டி ஏற்றப்பட்ட புதுக்கொடிகள் என்று புளுகுப் பிரச்சாரம் செய்யும் அவசரம் அதற்கு ஏற்பட்டது ஏன்?

அதையும் விளக்குகிறேன்.

x x x

எதிர்பார்த்த அளவு அவரது வருகைக்கு வட சென்னை ஆதரவு தரவில்லை. வந்த கூலிகளும் மனம் சோர்ந்து மூலைகளில் போய் முடங்கி விட்டனர். கூலிகளுக்கு ஏற்பட்ட அயர்வையும் அதனால் தனக்கேற்பட்ட தோல்வியையும் மறைக்கவுமே இப்படிப் பொய்யை அள்ளி வீசி எறிந்திருக்கிறது!

கொடிகளைப் பற்றிச் சொன்ன பொய் யாகிலும் தேவலை. "ஊர்வலம் வரும் போது கல்லை எறிந்து விட்டார்கள், **பிரிவினைக்காரர்கள்.** என்றாலும் அவர்களை நான் கோபிக்கவில்லை!" என்று புத்தன்போல் பேசித் திமிர்ப் புளுகை அவிழ்த்து விட்டது அது. கல்லெறிந்தவன் எனச் சொல்லப்படுபவன் எவன் என்று கண்டுபிடிக்கப் படவேயில்லை. அந்த நிலையில் தி. மு. கழகத்தான் எறிந்தான் என்று சொல்வது எந்த வகையில் உண்மை? சுருக்கமாகச் சொன்னால் ம. பொ. சி. கம்பெனி இலக்கியங்களில், அது உண்மை!

காவல் துறையினரும் ஊர்வலம் முழுவதும் உடன் வந்தனர். மற்றும் பொது மக்களும் ஊர்வலத்தைக் கூர்ந்து கவனித்து வந்திருக்கின்றனர். ஆனால் எங்கும் எந்த அசம்பாவிதமும் நடக்கவில்லை. "கிராமணிப் பிணம்" ஊர்வலம் வந்ததுதான், நடந்த ஒரே அசம்பாவிதம்! ஆனால் கூட்டத்தில் பரபரப்பு உண்டாக்கவும், தான் எதற்கும் அஞ்சாத தீரன் எனக் காட்டிப் புகழ் பெறுவதற்குமே இந்தப் பொய்யைச் சொல்லிவிட்டது.

x x x

"கல்லெறிதல்" பற்றிப் பேசி, இறுதியில் பெரிய புத்தர் போல, "அவர்களும் தமிழர்கள்தான்! ஆகவே அவர்களை மன்னிப்போம்!" என்று ஒன்றைச் சொல்லியது. ஏதோ ஒரு பெரிய போதனையைச் சொல்லிவிட்டதுபோல், இதைச் சொல்லி முடித்ததும் கூடியிருந்த "நான்கு கோடித் தமிழர்க"ளையும் பார்த்தது. அந்தக் குறிப்பை அறிந்து கொள்ளாத "நான்கு கோடித் தமிழர்க"ளும் சும்மா யிருந்தனர். உடனே எல்லைக் காவலர் கூட்டத்தைப் பார்த்து, "நான் இவ்வளவு பெரிய உண்மையைப் போதித்த பின்பும் நீங்கள் சும்மாயிருப்பதா? விசிலடித்து, ஊளையிட்டு, தகரடப்பா தட்டி, உடனே ஆர்ப்பாட்டம் செய்ய வேண்டாமா?" என்பதுபோல் அந்தத் தமிழர் தலைவர் கேட்டார், "**ஏன் கைதட்டவில்லை**" என்று. எந்தத் தலைவனும் இப்படி மேடையில் கேட்டதில்லை! ஆனால் தன்னைத் "தலைவன்" என்று சொல்லிக் கொள்ளும் இது மட்டும் கேட்டதய்யா!

உடனே நான்கு கோடிகளிலும் கூடியிருந்த நான்கு கோடித் தமிழர்களுள், இரண்டு கோடித் தமிழர்கள் கைகளைத் தட்டி மகிழ்ந்தனர்; மகிழ்வித்தனர்!

x x x

"கிராமணிப் பிணம்" என்று நானே இட்டுக்கட்டிச் சொல்லவில்லை! அதுவே சொல்கிறது! "கல்லெறிதல்" பற்றிப் பேசி முடிக்கையில், "பிணத்தின் மீது தான் கல்லெறிவார்கள். கல்லெறிவதால் பிணத்திற்கு ஒன்றும் துக்கமில்லை; எனக்கும் துக்கம் ஒன்றுமில்லை!" என்றது, அது! இப்போது உண்மை உங்களுக்கு விளங்கும். "நானே இட்டுக்கட்டியதா? அதுவே சொன்னதா?" என்று.

x x x

மற்றொரு அபூர்வ உண்மையையும் நான், அந்தக் கூட்டத்தின் வாயிலாக அறிந்துகொண்டேன். "இராட்டிரம்" என்றால் என்னவென்று விளக்க வந்த அந்த உருவம் இப்படிக் கேட்டது: "இராசன் பாபுவுக்கு என்ன பெயர் தெரியுமா?"

அந்த உருவமே அதற்குப் பதில் சொன்னது: "ராட்டிரபதி!"

"இராசன் பாபுவுக்குப் பெயர் **இராட்டிரபதி!**"

இந்த உண்மையை நீங்கள் உங்கள் நெஞ்சில் பதித்துக்கொள்ளுங்கள். சொன்னவர் கக்கனது உடன்பிறவா அண்ணன் என்றும் குறித்துக்கொள்ளுங்கள்.

யாரேனும் சரித்திரப் புத்தகத்தைக் காட்டி, "இராசேந்திர பிரசாத் வகிக்கும் **பதவி** இராட்டிரபதிப் பதவி!"-என்றால் அந்தப் புத்தகத்தை, திருப்பதிக் காவலரின் தலைமையில் கொளுத்துங்கள்! ஆதித்தனார் போல அவரே தீப்பெட்டி கூடக் கொண்டுவருவார்!

x x x

வேங்கடத்து வெங்காயத்தின் ஊர்வலம் போய்க்கொண்டிருந்தது. ஊர்வலத்தில் போய்க்கொண்டிருந்த ஒருவரிடம், "ஐயா எங்கே போறாக?" என்று கேட்க நினைத்தேன். ஆனால் நாத்தவறி "எங்கே போகுது?" என்று கேட்டு விட்டேன். ஊர்வலத்தில் சென்றவரும் "கல்லறைக்குப் போகுது!" என்றார். "சே! காசு தரும் தலைவனையே 'கல்லறைக்குப் போகுது!' என்று இழிவாகச் சொல்கின்றனரே, நன்றி கெட்டவர்கள்!" என்று எண்ணினேன். ஊர்வலம் முடிந்த பின்னர்தான் உண்மை தெரிந்தது. ஊர்வலம் முடிந்து கூட்டம் நடந்த இடம், கல்லறை இருக்கும் இடம். அதைக் கல்லறைத் திடல் என்றும் சொல்வார்கள். அதைத்தான் தொண்டர் அப்படிச் சொல்லியிருக்கிறார். ஆனாலும் வெங்காயம் பேசிய பின்னர், தொண்டர் சொன்னதும் உண்மைதான் எனப் புலப்பட்டது. வெங்காயம் தன்னைப் பிணம் என்று சொல்லிக் கொண்டதல்லவா? பிணம் கல்லறைக்குத்தானே போக வேண்டும்! போன பிணம் திரும்ப வெளியில் ஓடி வந்துவிட்டதுதான், விந்தை!

x x x

சில காலமாக விட்டு வைத்திருந்த சினிமா விளம்பரக் கம்பெனித் தலைவரை, மறுபடியும் தொடவேண்டி வந்துவிட்டதற்கு வருந்துகிறேன். இவ்வளவு எழுதிய பின்னும் அது திருந்தவில்லை என்றால், இன்னும் வலிவாகக் கவனிக்க வேண்டியது என்னுடைய கடமையாகிவிடும்!

இது எதையாகிலும் புளுகைச்சொல்லி விடுகிறது. அதை மறுக்கவில்லை என்றால் "ஆகா! நான் சொன்னது அத்தனையும் உண்மை!" என்று கத்த ஆரம்பித்து விடுகிறதே! அதனால் தான் மறுத்துக் காட்டியிருக்கிறேன். திருந்தட்டும்!

நகரத்து அரசியல், சினிமா விளம்பரக் கம்பெனித் தலைவரால் நாறுகிறது. சுகாதார அதிகாரிகள் உடன் கவனித்து ஊரைச் சுத்தப்படுத்த வேண்டுகிறோம்.

—மா. பாண்டியன்

உறக்கம்!

"**கங்குல்வந் தலைத்தருஉம்.**" (கலித்தொகை)

உறக்கம் இல்லை—தலைவன்.

புள்ளுறங்கும் புவியுறங்கும் போதும்--என்
பொல்லாத மனமுறங்கிக் காணேன்
வள்ளென்னும் நாயுறங்கும் சோர்ந்து--வகை
வானுறங்கும் கானுறங்கும் கூடச்
சிள்வண்டும் செம்புலியுமு றங்கும்--கொடுஞ்
சிறுத்தையொடு சிங்கமுமு றங்கும்
வள்ளியவள் காதலைநி னைந்து--நான்
விழியினை மூடேனு றங்கேன்!

நீருறங்கும் காருறங்கும் வானில்--எழும்
நிலவுறங்கும் ஒளியுறங்கும் வாழும்
ஊருறங்கும் உயிருறங்கும் காற்றும்--மோதும்
ஒலியுறங்கும் உணர்வுறங்கு முழைக்கும்
ஏருறங்கும் கானுறங்கும் கோழி--விழி
இட்டுறங்கும் செக்குறங்கும் பாயும்
தேருறங்கும் தெருவுறங்கும் ஆடும்—எட்டுத்
திசையுறங்கும் தேயமேயு றங்கும்!

இயலுறங்கும் இசையுறங்கும் சேரும்--தமிழ்
இன்சுவையும் தேன்குறளு றங்கும்
வயலுறங்கும் முத்துறங்கும் நத்தை--அட்டை
வாயுறங்கும் மதகுறங்கும் வாவிக்
கயலுறங்கும் செயலுறங்கும் ஆனால்--என்னைக்
கருவண்டால் மழைவிண்டாய்ச் செய்யும்
மயலுறங்கி மாலுறங்கிக் காணேன்--சுழல்
மனமுறங்கின் அன்றிநானு றங்கேன்!

—துரைமோகனன்

நடக்காதண்ணுச்சி நடக்காது!

— 4-ம் பக்கத் தொடர்ச்சி —

குறைகளை நீக்கத் தெரியாமல் திணறுகின்ற காரணத்தினலேதான் முன்னேற்றக் கழகம்போன்ற எதிர்க் கட்சிகளை நம்பாதீர்கள் என்று நா வலிக்காமல் பேசிக்கொண்டுள்ளார்! காமராசருடைய மதுரை மாவட்டச் சுற்றுப் பயணத்தில் இந்தச் செய்திகளைத்தான் அதிகமாகக் கேட்டுள்ளார்கள்! ஏழு நாட்களில் நூற்றுக்குமேற்பட்ட கிராமங்களில் முதலமைச்சருடைய நிகழ்ச்சிகள்—காலை 8 மணிக்குத் துவக்கி இரவு 10 மணிக்குத்தான் தன் பயணத்தை முடித்துக்கொண்டிருக்கிருர். ஊருக்கு முப்பது நிமிடங்கள்—இதிலே விருந்து வரவேற்புகள், கல்நாட்டுதல், கட்டிடம் திறந்து வைத்தல், கடைசியில் உரை நிகழ்த்துதல் முதலியன! ஐந்து நிமிடம் பேசுவாராம் எதிர்க்கட்சிகளை நம்பாதீர்கள் என்று. பின் 'போங்க போங்க—நானும் போகிறேன்' என்று புறப்பட்டுவிடுவாராம்! 'வழி விடுங்க வழி விடுங்க' என்று மேடையில் ஏறுவாராம். 'என்னங்க, என்னங்க' என்று கேட்டுச் சுற்றி நிற்கும் அதிகாரிகளிடம் 'கவனிங்க, கவனிங்க' என்று சொல்லுவாராம்! காரிலே உட்கார்ந்துகொண்டு "ஆகட்டும்; பார்க்கலாம்; பார்க்கலாம்;" என்று தலையாட்டுவாராம்! நேரிலே பார்த்தவர்கள் சொல்கிருர்கள்!

திராவிட முன்னேற்றக் கழகத்திற்குள்ள மக்களின் ஆதரவினை ஒரு நாளைக்கு இருபது கூட்டங்களில் இரண்டு நிமிடங்களில் பேசிக் கலைத்துவிடுவதென்று காமராசர் கருதியிருக்கவும் கூடும். அவர்கூட வருகிருரே கக்கன் என்பவர், அவரும் சொல்லியிருக்கலாம்! கக்கன் தலைமை வகிக்கக் காமராசர் கருத்துரை வழங்கியிருக்கிருர்! மின்னல் வேகச் சுற்றுப்பயணம். தேர்தல் நேரங்களிலே செய்யவேண்டிய வேலைகள் இப்போதே துவக்கப்பட்டுவிட்டன! மக்களின் வரிப்பணத்தால் கட்டப்பட்ட பள்ளிக்கூடங்களையும் திட்டத்திலேயிருக்கும் வைத்திய விடுதிகளையும் காட்டிவிட்டு, வாக்குக் கேட்டிருக்கிருர்கள். காங்கிரசுக் கட்சியை ஆதரியுங்கள் என்று கேட்பதிலே தவறில்லை. ஆனல் காங்கிரசின் புனிதத்தன்மைகளைப் பொதுமக்களிடத்திலே காமராசர் சொன்ஞரா? மற்ற கட்சிகள் எல்லாம் இலாயக்கற்றவைகள். காங்கிரசுக் கட்சி ஒன்றுதான் மக்களுக்கும் நாட்டுக்கும் சேவை செய்யக் காத்திருக்கிறது என்பது உண்மையானல், தனக்கும் காங்கிரசுக்கும் உள்ள தகுதிகளைத் திறமைகளைக் காமராசர் சொல்லவில்லையே ஏன்? அகில இந்தியக் காங்கிரசின் செயற்குழுக் கூட்டம் அண்மையில் புனு நகரில் நடைபெற்றதே, அந்த நிகழ்ச்சிகளில் காமராசர் என்ற தீவிரக் காங்கிரசுக்காரரும் சுப்பிரமணியம்-பக்தவத்சலம் என்ற மந்திரிகளும் ஆளுக்கொரு விமானத்திலே ஏறிப் பறந்துசென்ருர்களே, அங்கே இவர்கள் பேசியது என்ன? இவர்கள் பேசுவதற்கு அங்கே அனுமதித்தார்களா? அனுமந்தய்யாவின் தீர்மானம்தான் அங்கே பண்டித நேருவையே அலறிட வைத்திருக்கிறதே தவிர இந்த மூன்று அமைச்சர்களும் அங்கே ஊமைகள் தானே? காங்கிரசுக் கட்சியின் கூட்ட நடவடிக்கைப் படங்கள் வெளிவந்துள்ளனவே; இவர்களுடைய உருவங்களைக் காணுமே! வடநாட்டுக் காங்கிரசுக்காரன் இவர்களை மூலையிலே தள்ளி உட்கார வைத்த பிறகு, அதே காங்கிரசின் பெருமைகளைப் பற்றிப் பேசுவதற்கு இவர்களுக்கெப்படி அருகதை வருகிறது? அங்கே முதலமைச்சர் காமராச நாடாருக்கு ஆய்வுரைகள் தரும் வேலை கிடைக்கவில்லை. கட்சித் தலைவரின் தீர்மானத்திற்கு ஆள் பிடிக்கும் வேலைதான் அவருக்குக் கிடைத்துள்ளது. தலைமையின் தீர்மானத்தை ஆதரிக்க மறுத்தவர்களை வெளியிலே தள்ளும் வேலை முதலமைச்சருக்குத் தரப்பட்டது. இதனை நேரிலே கண்ட 'பிளிட்சு' நிருபர் "I saw the Bulky figure of Kamaraj Nadar trying to drag Physically K. K. Shah away from the Group in the centre of which sat Jawaharlal Nehru. Ofcourse, K. K. Shah refused." என்று குறிப்பிட்டுள்ளார்! காமராச நாடார் கே. கே. சா என்ற காங்கிரசுக்காரரைப் பிடித்து இழுத்தாராம்—இது செய்தி! ஒரு முதலமைச்சர் காங்கிரசுக் கூட்டத்தில் செய்யக் கூடிய வேலையா இது?

— அடுத்த இதழில் முடியும் —

கம்பதாசன் நூல்கள்
கவிதைகள் ரூ 6·00
கதைகள் ரூ 2·00
நாடகங்கள் ரூ 2·00
அருணு பப்ளிகேஷன்ஸ்
சென்னை-17.

தற்பொழுதுகூட நேர்முக வகுப்புகளிலும். தபால் மூலமும் ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள்
இங்கிலீஷ் மொழிப் பயிற்சி பெறுகின்ற சென்னையின் மாபெருங் கல்வி அரங்கம்



THE SCHOOL OF ENGLISH LEARNING
ஆங்கிலக் கல்வி நிலையம்,
60, பிராட்வே, மண்ணடி, சென்னை - 1.

தமிழ் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள்
ஒரே வருடத்தில்
ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தி அடிப்படையோடு இலக்கண ரீதியாகத் திருத்தமான முறையில்
இங்கிலீஷ் தபால் மூலம் கற்கலாம்

சேர்வதற்கு அச்சிட்ட மனுவைப் பெற்றுப் பூர்த்தி செய்து
9-7-'60-ந் தேதி
வரை அனுப்பலாம்.

அச்சிடப்பட்ட பாட விளக்கங்கள்
11-7-'60-ந் தேதி
முதற்கொண்டு தொடர்ந்து அனுப்பப்பட்டு, கற்கும்போது ஏற்படும் சந்தேகங்களுக்கு முறைப்படி அவ்வப்போது தெளிவுரைகள் வழங்கப்படும்.

ஆங்கிலத்தில் கருத்துக்களை அமைத்துச் சொந்தமாக எழுதவும் பேசவும் கட்டுரைகள் வரையவும் கடிதப் போக்குவரத்துச் செய்யவும் முறையாக அடிப்படையோடு கற்பிக்கப்படும்-சிறந்த முறையில இலக்கணப் பயிற்சி அளிக்கப்படும். "தபால் மூலம் அனுப்பப்படும் பாடங்கள் ஒரு நீண்ட தொடர் நாவலைப் படிப்பது போன்று ஆர்வத்தை ஊட்டுவனவாக இருக்கும்" எனில், மிகைப்படுத்திச் சொல்வதாகாது.

முக்கிய அறிவிப்பு: (1) 16 வயதிற்கு மேற்பட்டவர்களே சேரத் தகுதியுடையவர்கள். (2) ஆதாரப்பூர்வமான ஒப்பற்ற இலக்கணப் பயிற்சி அளிக்கப்படுவதால் ஓரளவு இங்கிலீஷ் தெரிந்தவர்களும் சேர்ந்து திருத்தமாகக் கற்றுத் தமக்குள்ள சந்தேகங்களைப் போக்கிக்கொள்ளலாம். (3) இங்கிலீஷ் ஓரளவு தெரிந்தவர்களுக்குத் தனியாகவும், எழுத்துமுதல் ஒன்றுமே தெரியாதவர்களுக்குத் தனியாகவும் பிரிவு பிரிவாகப் பயிற்சியளிக்கப்படும். (4) இத்தபால் முறையில் படிக்க ஆண்களும் சேரலாம்; பெண்களும் சேரலாம்.

அச்சிட்ட மனுவையும் முழு விவரங்களையும் எட்டு நயே பைசே (8 காசுகள்) தபால் பில்லை அனுப்பிப் பெறுக.

ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தி நல்ல முறையில் உலகமொழியாம் ஆங்கிலத்தைக் கற்க முன்வருக.

பக்தவத்சலத்திற்கும் சொரணை இருக்கிறதே!

உலக நாடுகளில் வாழ்கின்ற எந்த இனத்தானும் தன் இனத்தான் சிறுமைப்படும்போது சீறியெழுவதும், பெருமைப்படும்போது பெருமகிழ்வு கொள்வதும் இயல்பு - தமிழகத்துக் காங்கிரசார்க்கு மட்டும் இது விதி விலக்கு என்றுதான் இத்தனை நாளும் நமக்குத் தமது சொல்மூலமும், செயல்மூலமும் சொல்லிக்கொண்டிருந்தனர் - காட்டிக்கொண்டிருந்தனர்!

சான்றாக, ஒன்று! இந்தியத் துணைக்கண்டம் சுதந்திரமடைவதற்குச் சில ஆண்டுகட்குமுன்பு இந்து-முசுலீம் கலவரம் ஏற்பட்டதன் காரணமாக - அந்த இன வெறிக் கொடுமைக்குப் பலியாகப் பல பிணங்கள் வங்காள எல்லையோரத்திலே சாய்ந்தன! வடக்கின் பல்வேறு பகுதிகளிலும் பலர் படுகாயமுற்றனர்! இந்தியத் துணைக்கண்டம் முழுமையுமே இந்தக் கொடுமை தலைவிரித்தாடிட நேரிடுமோ என்றெல்லோரும் அச்சப்பட்டுக்கொண்டிருந்த அந்த நேரத்தில்தான், அப்போது அகில இந்தியக் காங்கிரசுத் தலைவராயிருந்த ஆச்சார்யா கிருபளானி அவர்கள் தம்பதி சமேதராய்ப் படுகளமாகிக்கிடந்த வங்காள எல்லைக்கு எழுந்தருளினர். இடத்தைப் பார்வையிட்டுப் பாதிக்கப்பட்டோர்க்கு (வடநாட்டார்க்கு) ஆறுதல் கூறி, "முசுலீம்களின் இனவெறி பெரும் கண்டனத்திற்குரியது-அவர்கள் செய்வது அயோக்கியத்தனம் - இந்துக்களின்மீது இப்படியா பாய்வது? இந்தியர்களே! என்னினத்தோரே! அச்சம் வேண்டாம்; அபயந் தருகிறேன் - உதவி பெறுவீர்கள்" என்னும் பொருள்பட நீண்ட அறிக்கையொன்றினை நாட்டுக்குத் தந்தார். சேட்டுகளின் ஏடுகளும், அவர்களின் தயவால் பிழைத்த தமிழகத்து ஏடுகளும் கொட்டை எழுத்துக்களில் அதை வெளியிட்டுக் கொட்டி முழக்கின! பாராட்ட வேண்டியதுதான்-இனப்பற்றுக்கு!

ஏறத்தாழ அதேபோல் சிங்களத்திலேயும் தமிழர்கள். "சிங்களவர் இன வெறியின் காரணமாகப் பல பிணங்கள் வீழ்ந்தன! தமிழர்களின் வீடுகள் தீக்கிரையாயின! தமிழ்த்தாய்மார்கள் சிங்களவெறியர்களால் மான பங்கப்படுத்தப்பட்டனர்!" என்கின்ற பயங்கரமான - இரத்தத்தைக் கொதிக்க வைக்கும் செய்திகள் அண்மையில் வெளிவந்தன! அந்த நேரத்தில் கண்டனங்களை வெளியிட்டுக் கண்ணீர் சிந்தினோம் நாம். அன்றையக் காங்கிரசுத் தலைவரைப்போல் "இங்கேயிருந்த - இருக்கிற காங்கிரசுத் தலைவர்கள் மனைவியையும் அழைத்துக்கொண்டு இலங்கை சென்று நம்மவர்களைக் கண்டு ஆறுதல் கூறவில்லையே என்று அங்கலாய்க்கவில்லை; இங்கே இருந்தாவது பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு உதவி செய்து, அனுதாபங் காட்டியிருக்கக் கூடாதா?" என்று ஏங்கவுமில்லை; எதிர்பார்க்கவுமில்லை நாம். ஆனால் எப்போதும்போல் பேசா மரமாகவாவது இருந்தார்களா என்றால் அதுவுமில்லை; தமிழகத்துக் காங்கிரசார் பச்சை இனத்துரோகிகள் என்பதைக் காட்டிக்கொள்வதற்காக இலங்கைக் கொலை நடந்த நேரத்தில், தமிழகத்துக் காங்கிரசிற்குத் தலைவராயிருந்த இராசாராம், தமிழர்கள்மீதுதான் தவறு என்று துணிந்து சொன்னார்! தமிழகம் தாங்கிக்கொண்டது; திராவிட முன்னேற்றக் கழகம் சிந்திக்கொண்டிருந்த கண்ணீரைத் துடைத்துக்கொண்டே சிரித்தது, அவர்தம் அகம்பாவங்கண்டு!

"இப்படி இனஉணர்ச்சியற்று உலகிலேயே கடையழிந்தவர்களாகக் காட்சி தருகின்றனரே காங்கிரசார், ஐயோ பாவம்!" என்று நாம் அனுதாபப்பட்டுக் கொண்டிருக்கின்ற இந்த நேரத்தில்தான் "எங்களுக்கும் இனஉணர்ச்சி இருக்கிறது! இன உணர்ச்சி இருக்கிறது!" என்கின்ற அலறல் காஞ்சியிலேயிருந்து வருகிறது!

அமைச்சர் பக்தவத்சலம் பேசியிருக்கிறாராம்: **"தில்லியில் வாழும் பிச்சைக்காரர்களில் பெரும்பாலோர் தமிழர்கள் என்பதை நினைக்க வருத்தமாயிருக்கிறது"**

பெரும்பாலான பிச்சைக்காரர்கள் தமிழர்களாம்! அதுவும் தில்லியில்! வருந்துகிறாராம் அமைச்சர்!

திராவிட முன்னேற்றக் கழகம் பல்லாயிரம் மேடைகளில் செவிடர்களுக்கும் கேட்கும்படி-புத்தியில்லாதவர்களும் புரிந்துகொள்ளும்படி சொல்லியிருக்கிறது-"வெளி நாடுகளில் மட்டுமில்லை; வடநாட்டிலும் தமிழர்கள் கேவலமாக அலைகிறார்கள்! பிச்சைக்காரர்களினும் கேவலமாக அங்கிருந்து விரட்டப்படுகிறார்கள்!" என்று!

ஆனால் நம்முடைய அமைச்சருக்கு இப்போதுதான் தெரிகிறது. தில்லிப் பக்கமிருந்து பிச்சை கேட்க வந்தவர்கள் பிரபுக்களாகிவிட்டார்கள்; அவர்கட்குப் பிச்சை போட்டு அனுப்பிய தமிழர்கள் இப்போது அவர்களிடம் பிச்சையெடுக்கப் போயிருக்கிறார்கள்-எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்கின்ற உண்மை!

இதிலே இன்னொரு ஆச்சரியம், அமைச்சர் எந்தச் சந்தர்ப்பத்திலே இந்த மணிமொழிகளை உதிர்த்திருக்கிறார் என்பதில்தான் இருக்கிறது!

காஞ்சியில் நடைபெற்ற 'பிச்சைக்காரர் விடுதி'யைத் திறந்து வைத்திடும்போதுதான் அமைச்சர் பேசியிருக்கிறார்.

ஆமாம். "நாடு முன்னேறிவிட்டது; பஞ்சம் ஒழிந்துவிட்டது; உற்பத்தி பெருகிவிட்டது; ஐந்தாண்டுத் திட்டங்கள் நிறைவேறிக்கொண்டிருக்கின்றன! தாழ்த்தப்பட்ட மக்களின் வீடுகளிலேகூட வெள்ளிப் பாத்திரங்கள் மின்னுகின்றன" என்று நாள்தோறும் முழங்கிக்கொண்டிருக்கின்ற காங்கிரசுக்காரர்கள் ஆள்கின்ற காங்கிரசாட்சியில்தான்-காங்கிரசு அமைச்சர்தான் "பிச்சைக்காரர் விடுதி"யைத் திறந்து வைத்துப் பேருரையாற்றி, அதிலேயே தமிழினத்திற்கும் அனுதாபந் தெரிவித்திருக்கிறார்!

ஐயோ, தமிழகமே, நீ காங்கிரசைப் பார்! அந்தோ காங்கிரசே, நீ தேர் தலைப் பார்!

—க. சிங்கமுத்து

பட்டியல் காண்பீர்!

பல்கும் பிற பல வளங்களும் பார்ப்பீர்!

கிழவனுக்கு வாழ்க்கைப்பட்ட குமரியைப்போல், காட்டில் காய்ந்த நிலவுபோல், கடலில் கரைத்த பெருங்காயம்போல், விழலுக்கிறைத்த நீர்போல், சீந்துவார் அற்ற சிங்காரச் சோலையைப்போல் திராவிடத்தின் வளங்கள் இருக்கும் நிலைமையைக் கண்டு, இரத்தக் கண்ணீர் வடித்து எடுத்து சொல்கிறோம், எத்து வேலைகளினால் பதவியில் ஏறிவிட்ட அகில இந்தியப் பித்தர்களுக்கு.

வளத்தைக் காட்டினால் திட்டம் எங்கே என்று கேட்கின்றனர். பணம் கொடுத்து ஓட்டு வாங்கி அமைச்சர்களான அவர்கள், ஆளும் பொறுப்பை ஏற்ற அவர்கள், திட்டம் தீட்ட வேண்டிய அவர்கள், நம்மைப் பார்த்து திட்டம் கேட்கின்றனர். சரி, இவர்களுக்கு வக்கில்லை; வழியில்லை; திட்டங் கொடுத்தால், "சே! சே! என்ன இது திட்டமா? இந்தத் திட்டத்தை எங்கள் காங்கிரசுக் கொடி தூக்கிகூடப் போடுவானே!" என்று பொருளாதாரத்தின் அரிச்சுவடிகூடத் தெரியாத இந்த ஆமாம் சாமிகள் அலறுகின்றன. நாம் கொடுத்த திட்டத்தைக் கண்டு நாடே வியந்தது! பாராட்டின, பத்திரிகைகள்! பொருளாதார மேதைகள் எல்லாம் பயனுள்ள திட்டம் இது என்று பாராட்டிப் பேசினர்.

என்ன செய்வது? நாயைக் குளிப்பாட்டி நடுவீட்டில் வைத்தாலும், வாலை ஆட்டிக்கொண்டு அது குப்பை மேட்டுக்குத்தான் போகுமாம்! அதுபோல் எத்தனைதான் எடுத்துச் சொன்னாலும், அந்த மரமண்டைகளுக்கு எங்கே புரிகிறது! உண்மையிலேயே தெரியாதவர்களுக்கு, அறியாதவர்களுக்கு, புரியாதவர்களுக்கு வேண்டுமானால் நாம் எடுத்துச் சொல்லலாம். புரிந்தும் புரியாதது போல் பாவிக்கும் பதவிப் பித்தர்களுக்கு நாம் என்ன சொல்லித்தான் என்ன பயன்? ஆனால், அதனால் நாம் நம் கடமையை விட்டுவிடக்கூடாது. தொடர்ந்து, நம்முடைய மூச்சு உள்ளவரை திராவிடம் பிரிவதற்கு வேண்டிய ஆதாரங்களை சலிக்காது, சஞ்சலப்படாது, எடுத்துச் சொல்லிக்கொண்டே வர வேண்டும்.

அவ்வகையில்தான் இவண் நாம் திராவிடத்தின் ஓர் அங்கமான தங்கக் கருநாடகத்தைத் தனி நாடாக்க, திராவிடத்தின் குடியாட்சி அமைப்பில் ஓர் அங்கமாக ஆக்க ஆதாரங்களை எடுத்துக் காட்டுகிறோம்.

ஒரு முறை (சென்னை) சட்ட மன்றத்திலே அறிஞர் அண்ணா அவர்கள் இறைச்சியை டின்னில் அடைத்து வெளி நாட்டுக்கு அனுப்பும் தொழில் செய்யச் சொல்லி அதில் நல்ல வருவாய் இருக்கிறது என்றும் எடுத்து சொன்னபோது நிதியமைச்சர் சுப்ரமணியம் "என்ன இது? அண்ணாதுரை கசாப்புக் கடை வைக்கச் சொல்கிறார்!" என்று சொல்லி தன் அறியாமையை காட்டிக்கொண்டாரே; கவனமிருக்கும் அது.

அப்படி கசாப்புக்கடை தொடங்க, இறைச்சியை டின்னில் அடைத்து அனுப்பும் தொழில் ஆரம்பிக்கக் கருநாடகத்து வளம் வழி கொடுக்கிறது.

உலக நாடுகளில் ஆட்டிறைச்சியையும் மாட்டிறைச்சியையும் ஏற்றுமதி செய்து, அதனால் நல்ல வருவாயைஅடையும் நியுசிலாந்து, ஆசுத்திரேலியா, டென்மார்க், சுவீடன், கனடாபோன்ற நாடுகள் பின்தங்கியா இருக்கின்றன? மேலும் அவை இறைச்சியை ஏற்றுமதி செய்வதனால் அந்த நாடுகள் ஐ.நா.வில் இடம் பெருமல், மற்ற நாடுகளால் "கசாப்புக்கடை" நடத்தும் நாடுகள் என்று இகழப்படுகின்றனவா? இல்லையே! அவை வளம் பல பெற்று வகையுடன் வாழ்கின்றனவே!

இது தெரியாத அப்பாவிகள் தாம் பிதற்றுகின்றன, 'கசாப்புக்கடை' என்று!

மாடு, ஆடு, கோழி போன்ற கால்நடைகளைப் பொறுத்தவரை கருநாடக மாநிலத்தில் நிறைய அளவு இருக்கின்றன. பால், முட்டை, இறைச்சி, தோல்போன்ற உபயோகமான பொருள்களைக் கொடுக்கும் இக்கால்நடைகள் ஒரு நாட்டின் வளத்திற்கு இன்றியமையாதவை அல்லவா!

மாடுகளின் எண்ணிக்கை பற்றிய பட்டியல்கள் தனியே கீழே தரப்பட்டிருக்கின்றன.

பட்டியல்களில் மாடு, எருமைகள் பற்றிய புள்ளி விவரம் தரப்பட்டிருக்கின்றது. 89 இலட்சத்து 65 ஆயிரம் மாடுகளும், 26 இலட்சத்து 68 ஆயிரம் எருமைகளும இருக்கின்றன, கருநாடகத்தில்.

இது அனைத்திந்திய மாடுகளின் கணக்கில் ஏறக்குறைய 20 சதவீதம் பெற்றிருக்கிறது.

நல்ல முறையில் பால்பண்ணைகள் துவங்கி, இறைச்சி தொழிலும் செய்ய ஏன் இயலாது?

இந்தியாவில் மொத்தம் 4 கோடி 49 இலட்சம் எருமைகள் இருக்கின்றன என்று கணக்கெடுக்கப்பட்டிருக்கிறது. இதில் ஏறக்குறைய 26 இலட்சத்து 68 ஆரயிம் எருமைகள் கருநாடகத்தில் இருக்கின்றன.

இது மட்டுமில்லாமல் இறைச்சிக்கு மிகவும் பெயர்போன ஆடு வகை கூட இங்கே இருக்கிறது. இறைச்சி விற்பனையைப் பெருமளவில் செயயும் வாய்ப்பு இருக்கிறது, கருநாடகத்தில்.

கருநாடக மாநிலத்தில் ஏறக்குறைய 40 இலட்சத்து 59 ஆயிரம் ஆடுகள் இருக்கின்றன. இந்த ஆடுகள் எல்லாம் இறைச்சி, கம்பளி, தோல் தரும் செம்மறியாடுகள். இது இல்லாமல் 25 இலட்சத்து 84 ஆயிரம் வேறு வகை ஆடுகளும் இருக்கின்றன. இவையும் இறைச்சிக்காகத்தான் பயன்படுகின்றன. இந்த ஆடுகளின் இறைச்சி மிகவும் சுவையானவை. வெளிநாடுகளின்று வருபவர்கள் பெங்களூரின் ஆட்டிறைச்சி சுவையானது என்று போற்றிப் புகழ்ந்து சென்றிருக்கின்றனர். எனவே சுவை மிகுந்த இந்த இறைச்சியை டின்னில் அடைத்து வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்தால் நல்ல வருவாய் கிடைக்கும்.

இந்தியாவின் ஆடுகள் எண்ணிக்கை 9 கோடி 46 இலட்சமாகும். இதில் கருநாடகத்தில் மட்டும் 66 இலட்சத்து 93 ஆயிரம் எண்ணிக்கையுள்ள ஆடுகள் இருக்கின்றன.

இது இல்லாமல் குதிரைகள் ஏறக்குறைய 43 ஆயிரத்திற்குமேல் இருக்கின்றன. இவற்றில் குதிரைப் பந்தயத்திற்கு பயன்படும் நல்ல ரக குதிரைகளில் சில அபூர்வ வகைகள் கூட இருக்கின்றன.

முட்டை, இறைச்சி போன்ற உணவுப்பொருள்களைத் தரும் கோழியும், வாத்தும் நிறைய இருக்கின்றன.

கோழிகளின் எண்ணிக்கை 76 இலட்சத்து 21 ஆயிரம் வரை வந்திருக்கிறது. கோழிப் பண்ணை வைத்து நடத்துவதற்குக் கருநாடக மாநிலத்துப் பருவநிலை வெகு நன்றாக இருக்கின்றது. மேலும் 'சிக்கன்' எனப்படும் ருசிவாய்ந்த கோழியின் இறைச்சி இங்கு பெயர்பெற்றது. அது மட்டுமன்று முட்டைகள் நல்ல முறையில் இடும் கோழிகளும் நிறைய இருக்கின்றன.

கோழியைப்போலவே பயன்படும் வாத்தும் மற்ற பறவைகளும் (உண்ணப்படும் பறவைகள் தாம்) பல ஆயிரங்கள் இருக்கின்றன.

இந்தியாவின் மொத்த எண்ணிக்கை இப்பறவைகளைப் பொறுத்த மட்டில்-9 கோடி 47 இலட்சம் ஆகும். கருநாடகத்தில் ஏறகுறைய ஒரு கோடியை எட்டும் அளவில் இப்பறவைகளின் எண்ணிக்கை இருக்கின்றது.

கால்நடைச் செல்வத்தைப் பொறுத்த மட்டில் வடஇந்தியாவை விடத் திராவிடம் பொதுவாகவும் கருநாடகம் குறிப்பாகவும நிறையப் பெற்றிருக்கின்றது.

வெளிநாட்டுக்கு ஏற்றுமதிசெய்து, அந்நியச் செலவாணி பெரும் அளவில் பெற இக்கால்நடைச் செல்வங்கள் பயன்படும். "என்ன கோழி, ஆடு, மாடுதானே?" என்று அலட்சியமாக இருந்துவிடக்கூடாது. இந்த ஆடு, மாடுகள்தான் பல மேல்நாடுகளுக்கு வாழவே அளிக்கின்றன எனபதை உணரவேண்டும்.

நம்நாட்டில்-தென்னகத்தில், திராவிடத்தில், கருநாடகத்தில் - கனி வளத்தினின்று கால்நடைச் செல்வம் வரை எல்லாம் இருக்கின்றன. என்ன பயன்? பயன்படுத்துவார் இல்லையே!

அந்நியச் செலாவணிக்கு வழி வகை செய்ய கருநாடகத்தின் வளங்கள் மட்டுமில்லாமல் அதன் அழகு மிகு திருநகரங்களும் இருக்கின்றன.

ஆம்! கருநாடகம் கவின் மிகு நாடு! அழகு கொழிக்கும் வீடு!

— 12-ம் பக்கம் —

1. காளைகள்-3 ஆண்டுக்குமேல்

இனவிருத்திக்காக இருக்கும் காளைகள்	...	46 2	ஆயிரம்
வேலை செய்வதற்கு ,, ,,	...	3222 6	,,
மற்றவை	...	151·0	,,
மொத்தம்		3419 8	ஆயிரம்

பசுக்கள்-3 ஆண்டுக்குமேல்

பசுக்கள்-பால் கொடுப்பவை	1183·2	,,
,, பால் வறண்டவை	1724·6	,,
வேலை செய்யும் பசுக்கள்	267 3	,,
மற்றவை	33·7	,,
மொத்தம்	3208·8	ஆயிரம்
மூன்று வயதுக்குக் குறைந்தவை	2337·0	,,
ஆக மொத்தம்	8965·6	,,

2. எருமைகள்-3 ஆண்டுக்கு மேல்-கிடாய்கள்

இன விருத்திக்காக இருப்பவை	17·5	ஆயிரம்
வேலை செய்பவை	248·6	,,
மற்றவை	14·7	,,
	280·8	ஆயிரம்

எருமைகள்-3 ஆண்டுக்கு மேல்-கிடாரிகள்

பால் கொடுப்பவை	767·5	ஆயிரம்
,, வறண்டவை	648·4	,,
வேலை செய்பவை	17·9	,,
மற்றவை	25·0	,,
மொத்தம்	1458·8	,,
3 வயதிற்குட்பட்டன	929·1	,,
ஆக மொத்தம்	2668·7	,,

ஆதாரம்: Statistical outline of Mysore 1959, Page 87, 88 & 89.

— 1-ம் பக்கத் தொடர்ச்சி —

சீக்கிய மொழி பேசுபவர்கள் பெரும்பான்மையினராக உள்ள பகுதிகளை மட்டும் ஒன்றாக இணைத்து இந்தியக் கூட்டாட்சிக்குட்பட்ட பஞ்சாபி சுபாவைத்தான் கேட்டு வருகிறார். இந்த நியாயமான கோரிக்கைக்காக அவர் நடாத்திவரும் கிளர்ச்சிகளும், அடைந்துவரும் இன்னல்களும் தனிநாடு கேட்கும் நமக்கெல்லாம் புதுத் தெம்பையும் புத்துணர்ச்சியையும் ஊட்டி வருகின்றன.

பல இலட்சக்கணக்கான சீக்கியர்களின் பேராதரவையும் நன்மதிப்பையும் பெற்றுள்ள சீக்கியப் பெரியார் தாராசிங் தலைமையில் இயங்கிவரும் அகாலி தளம் துவக்ககாலத்தில் ஒரு சமூகச் சீர்திருத்த இயக்கமாகவே இருந்து, 1914-ம் ஆண்டு அரசியல் விழிப்புணர்ச்சி பெற்று, சிறந்த சனநாயக அமைப்பும், ஏகாதிபத்திய எதிர்ப்புணர்ச்சியும் கொண்ட ஒரு தேசிய இயக்கமாக உருவெடுத்தது. இரண்டாம் உலகப்போரின் போது இலட்சக்கணக்கான சீக்கியர் மாஸ்டர் தாராசிங்கின் கட்டளையின்படி படையில் சேர்ந்து, வரலாற்றிலேயே நிலையானதொரு பேரிடத்தைப் பெற்றுவிட்டனர்.

1942-ம் ஆண்டில் கிரிப்சு குழுவினர் (Cripps Mission) இந்தியத் துணைக்கண்டத்திற்கு வந்திருந்த நேரத்தில் அகாலி தளத்தினர், சீக்கியர்கள் இந்துக்களிலிருந்து வேறுபட்ட பண்பினர் என்பதற்கு வரலாற்றுச் சான்றுகளையெல்லாம் எடுத்துக் காட்டி, இந்துத்தானம், பாகித்தானம் அமைக்கப்படும்போது 'ஆசாத் பஞ்சாப்' மாநிலத்தையும் அமைக்க வேண்டுமென்று உரத்த குரல் எழுப்பினர். இந்தக் கோரிக்கை அடிப்படையுடன் கூடிய முழுமைக் கருத்தாக, சீக்கிய மாநிலக் கோரிக்கையாக 1945-ம் ஆண்டு மாற்றம் பெற்று, அதன் அடிப்படையில் 1946-ம் ஆண்டில் நடைபெற்ற தேர்தலில், 23 தொகுதிகளில் அகாலிகளை வெற்றி பெறச் செய்தது.

1952-ம் ஆண்டு நடைபெற்ற முதல் பொதுத் தேர்தலில் 57 தொகுதிகளில் போட்டியிட்டு. 13 இடங்களைமட்டுமே பிடிக்க முடிந்தது அகாலி தளத்தால். பின்னர் நடைபெற்ற சிரோமணி குருத்வரப் பிரபந்தக் குழுத் தேர்தலில் 132 தொகுதிகளில் 110 இடங்களைப் பிடித்து, சீக்கியர்களிடையே தனக்கிருக்கும் தனிப்பெரும் செல்வாக்கை உறுதிப்படுத்திக் காட்டிற்று.

1957-ம் ஆண்டு நடைபெற்ற இரண்டாம் பொதுத் தேர்தலில் வெற்றி பெற வேண்டும் என்பதற்காகக் காங்கிரசு, 'பிராந்திய விதிமுறை' (Regional formula) ஒன்றை உருவாக்கி, அதன் அடிப்படையில் தன்னுடன் அகாலிதளம் ஓர் ஒப்பந்தம் செய்துகொள்ளுமாறு நடந்துகொண்டது. ஆனால், சில திங்களிலேயே மாஸ்டர் தாராசிங், ஒரு சில குறிப்பிட்ட சீக்கியர்களுக்குக் காங்கிரசு வேட்பாளராக நிற்க அனுமதி வழங்கப்பட்டதைக் கண்டு, காங்கிரசுடன் கருத்து வேறுபாடு கொண்டவராய்ப் பொதுத்தேர்தலில் காங்கிரசு சார்பில் நிறுத்தி வைக்கப்பட்ட சீக்கியர்களில், தான் விரும்பி ஏற்காத அத்தனை பேரையும் எதிர்த்துப் பிரச்சாரம் செய்தார். காங்கிரசார், அகாலி தளத்தினருடன் ஒப்பந்தம் செய்துகொண்ட பின்னர் பல சூழ்ச்சிச் செயல்களில் ஈடுபட்டு, முனைந்தனர். அகாலிகள் 'பிராந்திய விதிமுறை' முழுமையாக நடைமுறைக்கு கொண்டு வரப்பட்ட பின்னர் பஞ்சாபி சுபாவை எளிதில் பெறலாம் என்ற நம்பிக்கையின் பேரிலேயே காங்கிரசுடன் ஒப்பந்தம் செய்திருந்தனர். அந்த நம்பிக்கைக்கு வேட்டு வைக்கும் சில நிகழ்ச்சிகள் நடைபெற்றதும் இருவருக்கும் ஏற்பட்டிருந்த உடன்பாடு முறிந்தது.

ஒரு சில திங்களுக்குமுன் நடைபெற்ற சிரோமணி குருத்வார பிரபந்தக் குழுவின் பொதுத்தேர்தலில் காங்கிரசு - பொதுவுடைமைக் கட்சியினரின் கூட்டு எதிர்ப்பை முறியடித்து வெற்றி வாகை சூடிற்று, மாஸ்டர் தாராசிங் தலைமையில் இயங்குவதும், சீக்கிய மக்களின் முன்னேற்றம் ஒன்றையே முக்கியக் குறிக்கோளாகக் கொண்டுள்ளதுமானது அகாலிதளம். சில ஆண்டுகளாகப் பின்னுக்கு தள்ளி வைக்கப்பட்டிருந்த 'பஞ்சாபி சுபா'ப்பிரச்னை மீண்டும் புது வலிவும் பொலிவும் பெற்று சீக்கியர்களின் தன்மானப் பிரச்சினையாக மாறிற்று. "சீக்கிய மொழி வளர்ச்சிபெற்றுத் தனிச் சிறப்பெய்தவும் பெரும்பான்மையினரான இந்து வகுப்புவாதிகள் சீக்கிய வகுப்பினருக்கு இழைத்துவரும் அநீதிகளை அகற்றவும், சீக்கியர்கள் பெரும்பான்மையினராக உள்ள தனி மாநிலம் பெறவும், "பஞ்சாபி சுபா அமையும்வரை போராட வருவீர்! தன்மானங் காக்க வருவீர்!" என உரிமை முழுக்கம் எழுப்பியுள்ள சீக்கியப் பெரியார் தாராசிங் இன்று ஒரு தடுப்புக்காவல் கைதி. தள்ளாத வயதிலே, நாடி தளர்ந்து, நரம்பு முறுக்கிழந்திருக்கும் நிலையிலே, தனது உடன்பிறந்த தன் இனமக்கள் நல்வாழ்வுக்காக, தனது உயிரைப் பணயம் வைத்து, தனி சீக்கியமாநிலம் அமைப்பதற்காக பெரும் போராட்டத்திலே இறங்கியுள்ள மாஸ்டர் தாராசிங் இன்று சிறைக்கூடத்தில்! எந்தச் சட்டத்தின்படி? உள்ள நல்லறிவாளர் அத்தனை பேராலும் இகழப்பட்ட, கண்டிக்கப்பட்ட தடுப்புக்காவல் சட்டத்தின்படி அவர் ஒரு கைதி! கிழவர் உள்ளே பூட்டிவைக்கப்பட்டிருந்தும், ஆயிரக்கணக்கானோர் அணிவகுத்தனர், சூன் 12-ம் நாள்; பஞ்சாப் சுபா கோரிக்கையை வலியுறுத்தினர்.

தில்லிக் காங்கிரசார் மாஸ்டர் தாராசிங்கைப் பலமுறைகளில் பல நேரங்களில் ஏமாற்றியிருக்கின்றனர். மாஸ்டர் தாராசிங் மட்டும் ஏமாற்றுக்காரர்களுக் தனது உதவியைத் தராமலிருந்தால், இந்நேரம் அவரே பஞ்சாப்பின் ஆட்சித்தலைவராக இருந்திருப்பார். ஆனால் அவரிடம் பயன் பல பெற்ற காங்கிரசார் முக்கியமான நேரங்களில் காலைவாரி விட்டிருக்கின்றனர் இந்துக்களின் பால் தோழமைகொண்ட அப்பெரியவரை, இந்துக்களின் எதிரியாகவும் படம் பிடித்துக் காட்டிக் குழப்பத்தை வளர்த்தனர், காங்கிரசார். காங்கிரசாட்சியின்மீது சொல்லப்படும் குற்றச்சாட்டுக்களைக்கூட இந்துக்களின்மீது சொல்லப்படும் குற்றமெனத் திரித்துவிடுகின்றனர், காங்கிரசார். அகிலஇந்திய ஆட்சியை வைத்திருக்கும் காங்கிரசின் பஞ்சாப் தலைவர்களுள் ஒருவன்கூட தாராசிங் அவர்கள் அருகில் நிற்க இயலாது! பஞ்சாபின் அத்தனை காங்கிரசாரும் சிறுமணல் துளிகளே, மாமலையாம் தாராசிங்கின் முன்னர்! இந்தக் கருத்தை வெளியிட்டவர், சீக்கிய எழுத்தாளரில்லை; இந்துமகா சபையின் முக்கிய எழுத்தாளராவார் அவர் அவர் பெயர் ஓம்பிரகாச கசோல். தனது நூலொன்றில் தெரிவிக்கும் இக்கருத்துகள் இந்தச் சந்தர்ப்பத்தில் சிந்தித்தற்குரியன.

"சீக்கியர்கள் காங்கிரசின் முழு விரோதிகள். எந்த இந்தும் இதை இந்துமத விரோதச் செயல் என்று நினைத்தால், அது முழுக்க முழுக்க அந்த இந்துவின் தவறே! இந்த முரண்பாட்டில் சரியாகச் சிந்திக்கத் தெரிந்த எல்லா மனிதர்களும் சீக்கியர்கள் பக்கமே நிற்பர்!" – இப்படி எழுதியுள்ளார் தோழர் ஓம்பிரகாச கசோல். அவர் இந்துமகாசபைத் தேர்தல் குழுவின் முன்னாள் உறுப்பினர் என்பதையும் சொல்லிவைக்கிறேன். இவர் அகில இந்திய இந்துமகாசபைத் தலைமைச் செயற்குழுவின் முன்னாள் உறுப்பினரும் கூட.

இன்றையதினம் பஞ்சாபி சுபா கோரிக்கையைப் பொதுவுடைமைக் கட்சி, மக்கள் சமதர்மக் கட்சி, சுதந்திராகட்சி ஆகிய வேறுபட்ட அடிப்படைக் கொள்கைகளைக் கொண்ட கட்சியினரெல்லாம் ஒரே கருத்துடன் ஆதரிக்கின்றனர். என்றால் அது கோரிக்கையின் வலிவையும், இன்றியமையாத் தன்மையையும்தான் எடுத்துக்காட்டுகிறது. இந்தப் கோரிக்கைக்குக் பழுத்த காங்கிரசுக்காரரான கியானி குருமுக சிங் போன்றோரும் ஆதரவு தர முன் வந்துள்ளது, காற்று எப்பக்கம் வீசுகிறது என்பதையே எடுத்துக்காட்டுகிறது.

இந்தியத் துணைக்கண்டத்தின் வடகிழக்குப் பகுதியிலுள்ள நாகர்கள் பல ஆண்டுகளாகத் தனி நாகர்நாடு தில்லியுடன் தொடர்பு ஏதும் அற்ற சுதந்திர நாகர்நாடு கோரி, சனநாயக முறையில் சிலரும், பலாத்காரப் போராட்டங்களின்மூலம் மற்றையோரும் கிளர்ச்சி நடாத்தி வருகின்றனர். தென்பகுதியிலுள்ள நாம், சனநாயக முறையிலேயே, தமிழகம், கருநாடகம், கேரளம், ஆந்திரம் ஆகிய நான்கு மாநிலங்களுக்குமாகச் சேர்ந்து விடுதலை பெற முயன்று வருகின்றோம். திராவிடர்களாகிய நாமும், தில்லி ஏகாதிபத்தியவாதிகளும் எந்தெந்த வகையில் வேறுபட்டவர்கள் என்று, அவ்வப்போது அழுத்தம் திருத்தமாகக் கூறி வருகின்றோம். அது போன்றே இந்துக்கள் வேறு, தாம் வேறு என்று சீக்கியர்கள் கூறி வருகின்றனர்.

பஞ்சாபி சுபாவை மொழிவழி அமைக்கப் போராடிவரும் சீக்கியப் பெரியார் தாராசிங் இந்தியக் கூட்டாட்சியின் பிடியிலிருந்து முழுமையாக விடுபட்டு அடிமைத்தளைகளை அறவே களைந்தெறிய வேண்டுமெனின். சுதந்திர சீக்கியர் நாடு உருவாக வேண்டும். 'பஞ்சாபி சுபாக்' கோரிக்கையை விரிவுபடுத்தி, சுதந்திர சீக்கியர் நாடு அமைக்க இப்பொழுதிருந்தே கிளர்ச்சி செய்தால், இன்னமும் சில ஆண்டுகளில் தனது காலத்திலேயே, தனது முயற்சியாலேயே, சுதந்திர சீக்கியர் நாடும் அமைய எல்லா வாய்ப்புக்களும் இருக்கின்றன.

சீக்கியப் பெரியார் தாராசிங் என்றேனும் ஒருநாள் இந்தக் கருத்தை ஏற்றுச் செயல்படவேண்டி வரும். இந்தியக் கூட்டாட்சி உடைக்கப்பட்டு நொறுக்கப்பட்டேயாக வேண்டும் என்று விரும்பும் நமது ஆதரவு அன்னாருக்கு என்றைக்கும் உண்டு.

கடந்த 19-ம் நாளும் அதை ஒட்டிய நாட்களிலும் தில்லித் தெருக்களில் ஊர்வலம் சென்ற சீக்கியர்கள் பலி வாங்கப்பட்டிருக்கின்றனர். அவர்கள் உடலிலிருந்து இரத்தவெள்ளம் பாய்ந்திருக்கிறது. அது விடுதலைப் பயிரை அறுவடை செய்யாமல் போகாது.

வாழ்க சீக்கியப் பெரியார் தாராசிங்! வெல்க அன்னார் முயற்சி!! வருக சுதந்திர சீககியர் நாடு!!!

—கோவி. இராசன்.

வராத விளம்பரம்

அடுத்த இதழில்

ஆரம்பிக்கப்படும்

புதிய பகுதி!

— 5-ம் பக்கத் தொடர்ச்சி —

பாராட்டிவிட்டுச் சென்றார்கள். தர்மலிங்கமும் கற்பகவல்லியம்மாளும் எப்படியோ காரியம் நிறைவேறிவிட்டது என்று அகமகிழ்ந்தார்கள்.

ஆனல்...காரியம் எப்படி நிறைவேறியது? எனக்குத்தான் தெரியும்! ஏற்பாடு செய்யப்பட்ட மணமகனை நான் அணுகி விவரங்களைச் சொன்னேன். அவனும் ஒப்பித் திருமணத்தன்று "டிமிக்கி" கொடுத்து விட்டான். நிலைமை முற்றியதால்தான், மணவாளன் மணமகனானன். எல்லாம் ஒரு வழியாய் நடந்தும் முடிந்தன!

—சி. தமிழன்பன்.

— 11-ம் பக்கத் தொடர்ச்சி —

எழில் ததும்பும் பூக்காடு! வளங்கள் கொஞ்சும் கிளிககூடு! அது எங்கள் நாடு!

எல்லா வகையிலும் நமக்கு வருவாயும், வளமுள்ள வாழ்ககையும், வசதியும், இலாபமும், அந்நியச் செலாவணியும் பெறறுத் தரத்தக்க வளங்கள் இருககின்றன. திராவிடத்தில் இவற்றை இம்மியும் விடாமல பயன்படுத்த என்றுதான் வழி பிறக்குமோ?

—இரா. மதனகோபால்
பி. காம், டி. ஐ. பி.

ஆசிரியர்: கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர்: இராம. கிருட்டினன், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127 மவுண்ட்ரோடு, சென்னை-6 தமிழ்நாடு.
தொலைபேசி எண் 83510.